நூலகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நினைவுப்பேருரை

ஆவணமாக்கலும் அதன் சமூகப் பெறுமானமும் :

யாழ்ப்பாணத்து சமய இதழ்களினூடான ஒரு தரிசனம்

தி. செல்வமனோகரன்

சிரேஷ்டவிரிவுரையாளர்

சைவசித்தாந்தத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

27.12.2022 செவ்வாய்க் கிழமை

நூலக கேட்போர்கூடம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
மறைந்த நூலகர்
ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் சிவநேசன் அவர்கள்
அமரத்துவமடைந்த மூன்றாம் ஆண்டு
ஞாபகார்த்த நினைவுப் பேருரை

ஆவணமாக்கலும் அதன் சமூகப்பெறுமானமும்:
யாழ்ப்பாணத்து சமய இதழ்களினூடான ஒரு தரிசனம்.

திரு. தி. செல்வமனோகரன்
(சிரேஷ்ட விரிவுரையாளர். சைவசித்தாந்தத்துறை.
இந்துக்கற்கைகள்பீடம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

27.12.2022 செவ்வாய்க்கிழமை
நூலகக்கேட்போர் கூடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைவேந்தரின் செய்தி

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் புலமைப் பாரம்பரியத்தில் நூலகத்துக்குப் பெரும்பங்குண்டு. இந்த நூலகத்தை திறன்மிகுந்ததாக நிர்வகித்தவர்களுள் ஒருவராக அமரர் திருமதி ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் திகழ்கிறார். அமரத்துவம் அடைந்த அவரின் பெயரால் தொடர்ந்து மூன்றாவது வருடம் நினைவுப்பேருரை நடாத்தப்படுவதையிட்டு துணைவேந்தர் என்ற வகையில் எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மறைந்த நூலகர் திருமதி ஸ்ரீகாந்தலட்சுமியின் நூலகச் செயற்பாடுகளையும் சமூக அக்கறைகளையும் நான் ஆரம்பகாலத்தில் இருந்தே அறிவேன். அவரது தெளிந்த சிந்தனையும் தனது கருத்துக்களை சபைகளில் அஞ்சாது உரைக்கும் திறனையும் நான் கண்டும் கேட்டுமிருக்கின்றேன். பன்முக ஆளுமையுடைய பெண்மணியாக அவர் திகழ்ந்தார். நிறைந்த வாசிப்பும் நூலகத்தேட்டமும் சமூக புழங்கு பொருட்களை சேகரிப்பதில் அவருக்குள்ள நாட்டமும் என்னை வியப்படையச் செய்திருக்கின்றது. அம்மையாரின் தேட்டங்களில் பெரும்பகுதி எமது பல்கலைக்கழக நூலகத்துக்குக் கிடைத்திருப்பது மிகவும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

இன்று எமது பல்கலைக்கழக நூலகத்தின் வினைத்திறன் மிக்க செயற்பாட்டிலும் சேகரத்திலும் நூலக அமைப்பு முறையிலும் அவரின் பங்களிப்பு கணிசமாக உண்டு. நூலகத்தினூடாக அவர் நடத்திய கண்காட்சிகள், சர்வதேச ஆய்வு மாநாடுகள் என்பன முக்கியத்துவம் வாய்ந்தவை. அவர் செய்த நல்வினைகளின் பயனாகவே இலங்கைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகத்தின் தலைமைத்துவப் பொறுப்பினை ஏற்ற முதற் தமிழர் என்ற பெருமை அவருக்குக் கிடைத்தது.

திருமதி ஸ்ரீகாந்தலட்சுமி அவர்களின் நினைவுப் பேருரையை ஆற்ற இருப்பவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் சைவசித்ததாந்தத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. தி.செல்வமனோகரன். நிறைந்த நூல் சேகரிப்பும், வாசிப்பும் மிக்க இவர் இந்த நினைவுப் பேருரையை ஆற்றுவதற்கு மிகவும் பொருத்தமானவர். சிறந்த ஆய்வுரையை வழங்கவல்லவர்.

மறைந்த நூலகரான திருமதி ஸ்ரீகாந்தலட்சுமியின் ஆய்வுப்புலமாகவும் வாழ்வியல் இலக்காகவும் இருந்த சமூகப் பெறுமதிமிக்க ஆவணப்படுத்தல் பற்றியதான இந்த உரை மிகவும் பொருத்தமானதெனக் கருதுகிறேன். அந்தவகையில் இந்த நினைவுரையை ஏற்பாடு செய்த அன்னாரின் உறவுகளுக்கும் பல்கலைக்கழக நூலகத்தினருக்கும் நினைவுரையாற்றுகின்ற செல்வமனோகரனுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேராசிரியர் சி. சிறிசற்குணராசா
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணமாக்கலும் அதன் சமூகப்பெறுமானமும்:
யாழ்ப்பாணத்து சமய இதழ்களினூடான ஒரு தரிசனம்.

முன்னீடு

துணைவேந்தர் அவர்களே, பதில் நூலகர் அவர்களே, சிரேஷ்ட உதவி நூலகர்களே, உதவி நூலகர்களே, நூலகப்பணியாளர்களே, பேராசிரியர்களே, விரிவுரையாளர்களே, மாணவர்களே, ஆர்வலர்களே, திருமதி ஸ்ரீகாந்தலட்சுமி அவர்களின் உறவினர்களே அனைவருக்கும் எனது மாலை வணக்கம். ஈழத்தின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த நூலக ஆளுமைகளுள் ஒருவராகத் திகழ்ந்த திருமதி ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் நினைவாக வருடந்தோறும் நிகழ்ந்து வருகின்ற நினைவுப்பேருரை வரிசையில் இவ்வாண்டுக்கான நினைவுப்பேருரையினை ஆற்றுவதற்கான சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தமையையிட்டு மனம் மகிழ்கிறேன். இதற்கான ஏற்பாட்டினைச் செய்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக சமூகத்திற்கும் குறிப்பாக நூலகர் திரு. எஸ். கேதீஸ்வரனுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மஹாகவி பாரதி சுட்டிய புதுமைப்பெண்ணாக எம் கண்முன்னே உலாவியவர் ஸ்ரீகாந்தலட்சுமி அவர்கள். நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வை, அவனியில் யார்க்கும் அஞ்சாமனம், தீர்க்கமான தீர்க்கதரிசன சிந்தனை எனத் தனித்த அடையாளங்களை உடையவராக அவர் திகழ்ந்தார்.

இணுவில் சைவ மகாஜனா. இராமநாதன் கல்லூரி என்பவற்றின் மாணவியான இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொருளியற் துறைப் பட்டதாரியாவார். நூலகவியலில் இவருக்கு இருந்த ஈடுபாட்டால் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் நூலக இளமாணிப்பட்டத்தையும் பெங்களூரில் முதுமாணிப்பட்டத்தையும் பெற்றுக் கொண்டவர். கல்வியே கருந்தனம் என வாழ்ந்தவர்.

நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் நிறுவுனராக, அறிதூண்டல் மையத்தின் இயக்குனராக, நூலக நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவராக, என நூலகச் செயற்பாட்டில் பல்பரிமாணம் மிக்கவராகத் திகழ்ந்துள்ளார். இலங்கைத் தேசிய நூலகத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட தமிழராகவும், தமிழ்ப் பெண்மணியாகவும் இவர் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் கலைக்களஞ்சியங்கள், அகராதிகள் உள்ளிட பதின்மூன்று நூல்களை ஆக்கியளித்துள்ளனர். ஆவணமாக்கல் செயற்பாட்டில் மிகத்தீவிரமாகத் தன் இறுதி மூச்சுவரை பாடுபட்டவர். பிறரையும் ஆவணமாக்கலில் ஈடுபடத்தூண்டியவர். ஆவணமாக்கற் செயற்பாட்டிலும் மீள்பதிப்பு முயற்சிகளிலும் என்னைத் தூண்டியவர்களுள் இவரும் ஒருவர். இவரிடம் நூலகவியல் கற்றவர்களில் நானும் ஒருவன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொழில் முறை நூலகராக மட்டுமிராமல் தன்னார்வ நிலையில் பல்வகைப்பட்ட ஆவணங்களைச் சேகரிப்பிலும் காட்சிப்படுத்துவதிலும் நிறைந்த ஈடுபாடு காட்டினார். இதே நூலகக் கேட்போர் கூடத்தில் வடக்கு மாகாண கல்வியமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற மீள்பதிப்பு – தொகுப்பு நூல்களின் வெளியீட்டு நிகழ்வில் அவராற்றிய இறுதியுரையில் எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பதிப்பு முறைகளை பாராட்டியிருந்தமையை மனநெகிழ்வுடன் நினைவு கூறுகிறேன்.

ஈழத்துப்புலத்தில் நூலகவியலை வெகுசனப்படுத்த – மக்கள் மயப்படுத்த முயன்ற, ஆவணவாக்கல் செயற்பாட்டில் முன்னின்று உழைத்த கலைஞானி, குரும்பச்சிட்டி இ. கனகரத்தினம், நூல்தேட்டம் என். செல்வராஜா போன்றவர்களின் பணிகளோடு இவரது பணிகளும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகின்றன. யாழ்ப்பாணத்தின் மும்பரிமாண நூலகமாக இப்பல்கலைக்கழக நூலகத்தைக் கட்டமைக்க அவரெடுத்த முயற்சி முக்கியமானது. ஈழத்தமிழரின் நூலக வரலாற்றில் ஸ்ரீகாந்தலட்சுமி தனி ஒரு சகாப்தம். அவருடைய நினைவுரையை, அவருடைய விருப்புத்துறையான ஆவணமாக்கலை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்துவதில் மகிழ்கின்றேன். விளிம்பு நிலை விடயங்களை மையத்துக்கு இட்டுவரும் குணாதிசயம் உடையவர் அவர். அந்தவகையில் சமூகப் புறக்கணிப்புக்கு உள்ளாகிவரும் சமய இதழ்களை விளிம்புநிலையில் இருந்து மையத்துக்கு இட்டுவருதலின் தேவையை ஆவணமாக்கப்படுதலின் அவசியத்தை குறித்து விரிவாக உரையாற்ற விரும்புகிறேன். இந்த ஆய்வு முயற்சிக்குத் துணை நின்ற திரு. தெ. மதுசூதனன், கலாநிதி (திருமதி) மைதிலி விசாகரூபன், திரு. இ. தனஞ்சயன் ஆகியோருக்கு எனது நன்றி என்றுமுரித்து.

1.0 அறிமுகம்

இன்றைய அறிவியல் உலகில் அதிகம் பயன்படுத்தப்படுகின்ற சொற்களான ஆவணம், ஆவணவாக்கம், ஆவணமாக்கல், ஆவணவகம், ஆவணக்காப்பகம் போன்றன ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தவையாகக் காணப்படுகின்றன. நூலகவியல் தளத்திலும் ஏனைய நிறுவனங்களிலும் இச்சொற்கள் புழக்கத்தில் இருந்து வருகின்றன. மானுட வாழ்வில் தொடர்பாடலுக்கு பிரதான இடமுண்டு. தொடர்பாடலின் பிரதான அம்சங்களாக கல்வியறிவூட்டல், தகவலளித்தல், இயங்கச்செய்தல், பொழுது போக்கு போன்றவை எடுத்துரைக்கப்படுகின்றன. (ரகுராம்,எஸ்,(2016), ப.95) மனித குலவிருத்தியில் தகவலளித்தல் நீண்டதும் தனித்துவமானதுமான செல்நெறியை உடையது. தகவல்கள் சேகரிக்கப்பட வேண்டியவையாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணிவைக்க வேண்டியவையாக அமைகின்றன. நிறுவனமயப்பட்ட வாழ்விலும், தனிமனித வாழ்விலும் தகவலும் தகவற்சேகரிப்பும் விரும்பியோ விரும்பாமலோ மனித மனவடுக்குகளில் பதிவு செய்யப்படுகின்றன. மனதில் பதியப்பட்டவை மீளளிக்கை செய்யப்படும் போது 'ஞாபகம்' ஆகவும் மீளளிக்கை செய்யப்படாது போகின்றவை 'மறதி' ஆகவும் அமைகின்றன.

இந்த அகவியற் செயற்பாட்டுக்கு அப்பால் மனிதர், தனக்கான அல்லது சமூகத்துக்கான தகவல்களை புறவியல் தளத்தில் பதிவு செய்ய முற்பட்டனர். அவை உரு, வரி, வடிவம், அலை ஆகிய நான்கு தளங்களில் நிகழ்த்தப்பட்டன (ஸ்ரீகாந்தலட்சுமி, 2018) லத்தீன் கலாசாரமும் பிரெஞ்சுமொழி அகராதிகளும் 'Document' எனும் சொல்லுக்கு Instruction or proof (அறிவுறுத்தல் அல்லது ஆதாரம்) என விளக்கமளிக்கின்றன. Document என்பது தமிழில் 'ஆவணம்' எனச் சுட்டப்படுகின்றது. சமகால செல்நெறியில் இது "A document is a proof in support of a fact' (ஓர் ஆவணம் ஒரு உண்மையை ஆதரிக்கும் ஒரு சான்று) எனக் குறுகத்தறித்த வரைவிலக்கணமாகச் சுட்டப்படுகின்றது. (Ronald E.Day and Laurent Martinet with Hermina, G.B Anghnelescu,1951,p.1)

1.1. ஆவணம்

குறித்த ஓர் ஆவணம் நிலையான அறிவின் அனைத்து அடிப்படைகளையும் கொண்டதாக இருக்கும் போதே முதன்மை பெறும். ஆவணமானது உறுதிப்படுத்துவதாய், குறியீட்டு அடையாளமாய், பிரதிநிதித்துவம் செய்வதாய், மறுசீரமைப்புச் செய்வதாய், அறிவுசார் நிகழ்வை நிரூபணம் செய்வதாய், அவற்றைப் பாதுகாப்பதாய், பதிவு செய்வதாய் அமைந்திருக்கும். எடுத்துக்காட்டாக ஒரு கல், ஒரு படம் அல்லது ஓவியம், ஒரு மிருகம், ஒரு தினப்பத்திரிகை, அல்லது ஒரு சுயவிபரக்கோவை ஆவணமாகக் கருதப்படலாமா என வினவினால் ஆம், இல்லை எனும் இருவகை விடைகளும் தரப்பட அநேக சந்தர்ப்பங்கள் உண்டு. தொல்லியலின் பாற்பட்ட ஒரு கல் தொல்லியலாளருக்கு முக்கிய ஆவணமாகின்றது. மற்றையவர்க்கு அது வெறும் பாடாணமாகிறது. ஒரு ஓவியமோ படமோ குறித்த துறைசார்ந்தவருக்கு சிறந்த ஆவணம்: மற்றையவர்க்கு அல்ல. இவ்வாறே மற்றயை எடுத்துக்காட்டுக்களும் அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே ஆவணம் என்பது தரவுகளின் காப்பாக, தகவல் வழங்கியாக அமைகின்றது. அது தனிமனிதரின் பிறப்பு, இறப்பு அத்தாட்சிப்பத்திரம், அடையாள அட்டை, நாட்குறிப்பேடு, தகுதிச்சான்றிதழ்கள், குடும்பஅட்டை உள்ளிட்ட பலவும் சமூகம் அல்லது தேசம் சார்ந்த, குடிசனப்பதிவேடு, வர்த்தமானி, வரவுசெலவுக்கணக்கு, தேர்தல் இடாப்பு, பாடசாலை, பல்கலைக்கழக பதிவேடுகள் உள்ளிட்ட நிறுவனமயப்பட்ட பதிவுகள், வெளியிடப்பட்ட, வெளியிடப்படாத ஆவணங்களாகக் கருதப்படுகின்றன. ஆராய்ச்சித் தரவுப் பதிவேடுகள், வரைபடங்கள், நிறங்கள், ஓவியங்கள், சிற்பம், கட்டடம், உள்ளிட்ட கட்புலக்கலைகள், ஆற்றுகைக்கள் புகைப்படங்கள், படங்கள், பத்திரிகைகள், நூல்கள், ஒலிநாடாக்கள் ஒலி அலைகள் என்றவாறு 'ஆவணம்' எனக்கருதத்தக்க பொருட்கள் எல்லையற்று விரிகின்றன.

குறித்த அறிதற் செயற்பாட்டுக்கு உதவும் ஆவணங்கள்

1. முதன்னிலை அல்லது ஆரம்ப ஆவணம்,
2. இரண்டாம் நிலை ஆவணம்

எனப் பிரித்துரைக்கப்படுகின்றன. இங்கு ஆய்வு விடயத்தைப் பொறுத்து ஆவணங்களின் முதன்னிலை, இரண்டாம் நிலை எனும் படிநிலைகள் மாறுபட வாய்ப்புண்டு. ஓர் ஆய்வின் முதன்னிலை ஆவணம் பிறிதொரு ஆய்வின் இரண்டாம் நிலை ஆவணமாகலாம் அல்லது பொருத்தமற்றதும் ஆகலாம். குறித்த ஆய்வில் ஆவண ஒற்றுமை என்பது அவசியமானதாகும். குறித்த விடயத்தைப் பேசுகின்ற ஆவணங்கள் ஒத்த கருத்துடையவாய் இருத்தல் மற்றும் குறித்த விடயம் பற்றி பிரதி பண்ணப்பட்ட ஆவணங்கள் ஒரே மாதிரியாக இருத்தல் ஆய்வை உறுதிப்படுத்தும். அவ்வாறு அல்லாதவிடத்து அது ஆய்வை வலுவிழக்கச் செய்யும். பிரதிபடுத்தப்பட்ட ஆவணங்களின், ஒற்றுமையின்மையை தமிழியலாய்வாளர்கள் 'பாடபேதம்' எனக் குறிப்பிடுவர்.

ஆவணங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகளில் விஞ்ஞான ஆய்வுகளே முதன்மை பெற்றிருந்தன. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் ஏறத்தாளத் தொடர்ந்தும் ஆவணங்கள் புதிப்பிக்கப்பட்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றன. குறித்த கண்டுபிடிப்பு குறித்த காலத்தில் காலாவதியான உண்மையாகி விடுகின்றது. குறித்த ஆவணமும் காலாவதியாகி விடுகின்றது. புதிய கண்டுபிடிப்பு நிகழ்த்தப்படுகின்றது. ஆனால் மனிதப்பண்பியல் துறைகளில் ஆவணங்கள் தொடர்ந்தும் குவிந்த வண்ணம் இருக்கின்றன. மொழி, வரலாறு, சமயம், தத்துவம், பொருளாதாரம், அரசியல், கலை, சட்டம் மற்றும் அறிவியலின் வரலாறு போன்றவை கடந்த காலத்தில் அகலக்காலூன்றி கிளைத்துக் கிளைத்து வளர்ந்துள்ளன. இங்கு புலமைத்துவம் பழமையோடு உறவாடுவதாக இருக்க, அறிவியல் (கண்டுபிடிப்பு) புரட்சிகரமானதாக அமைகின்றது. மனித அறிவின் பல்பரிமாணம் என்பது இவ்விரு விடயங்களுக்குமிடையிலான ஊடாட்டமாக, இரு மனநிலை அணுகுமுறைகளுக்கு இடையிலான நிரந்தர சமரசமாக அமைந்துள்ளது.

ஒவ்வொரு ஆவணத்திலும் பொருள், அறிவாற்றல், சமூகக்கலாசாரம் என்பன பின்னிப்பிணைந்துள்ளன. அதேவேளை ஆவணம் என்பது நிபுணர்களால் மட்டுமன்றி சாதாரண மனிதர்களாலும் உருவாக்கம் பெறுவது குறிப்பிடத்தக்க விடயமாகின்றது. ஆவணங்கள் தயாரிக்கப்படும் போது தகவலின் உண்மைத்துவம் பிரதானமானதாகும். ஏனெனில் தகவலைப் பதிவு செய்யும் தனிநபரின் அனுபவம், தற்சார்பு என்பன ஆவணத்தில் செல்வாக்குச் செலுத்தும் வாய்ப்பு அதிகம் உள்ளது. அது 'மனித தகவல் நடத்தை' யாக அமைவதையும் அவதானிக்கமுடிகிறது. (Hartel,2014)

ஆவணங்களைச் சேகரித்து வைக்கும் இடம் ஆவணவகம், ஆவணக்காப்பகம் எனும் பெயர்களால் சுட்டப்படுகின்றன. இவை தனியாகவும் ஏனைய நிறுவனங்களோடு இணைந்தும் காணப்படுகின்றன. ஒவ்வொரு நிறுவனமும் தனக்கான ஆவணக்காப்பகத்தை பிரத்தியட்சமான பருப்பொருளாகவும், இணையவழிக் கட்டமைப்பிலும் கட்டமைத்துள்ளன. பல்பரிமாணமுள்ள நூலகங்கள் ஆவணக்காப்பகங்களாயும் திகழ்கின்றன.

1.2. ஆவணப்படுத்தல்

மனித குல வரலாற்றில் கருவிக்கையாட்சி, மொழிப்பயன்பாடு எனும் இருபெரும் நிகழ்வுகளின் தொடர்ச்சியாக ஏற்பட்ட பகுத்தறிவுச் சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைப் பற்றிய, தன் குழுமம் பற்றிய, சுய சிந்தனை வளர்ச்சியை மனிதர்க்கு ஏற்படுத்தியது. மனிதர் தமது கருத்தை உடல் மொழியாலும் ஓவியங்களாலும் பிறருக்கு உணர்த்த முற்பட்ட வேளையில் ஆவணம் உருவாகத் தொடங்கியது. அது ஆவணம், ஆவணமாக்கல் எனும் பிரக்ஞையின் வழி கட்டமைக்கப்படாவிட்டாலும் கற்களில், குகைகளில் கீறிய ஓவியங்களும், குறியீடுகளும் பிற்காலத்தில் எழுத்துக்களும் மனித குல வரலாற்றினை அறிய உதவி நிற்கின்றன. அழியாத நீண்ட வரலாற்றில் மிளிர்ந்து நிற்கும் தொல்நாகரிகங்களின் கீறல்களும், கிறுக்கல்களும், ஓவியங்களும், எழுத்துக்களும் மனிதநாகரிக வளர்ச்சியின் ஆவணங்களே. மழை, வெயில் போன்றவற்றால் பாதிக்கப்படாது அவை குகைகளுள் வரையப்பட்டமை ஆவணப்படுத்தலின் ஒரு முன்னோடி முயற்சி எனலாம்.

சிலைகள், சிற்பங்கள், பொருட்கள், ஓவியங்கள், கல்வெட்டுக்கள், ஏடுகள், செப்புப்பட்டயங்கள் எனப் பல்வேறு ஆவணங்கள் கல், மரம், தாவரங்களின் தாள்கள் (புல், பனையோலை) உலோகங்கள், காகிதாதிகள் எனப்பல பொருள்களை ஆதாரமாகக் கொண்டு அல்லது மூலப்பொருள்களைக் கொண்டு உருவாக்கப்படுகின்றன. இன்று நவீன தொழில்நுட்பவியலின் வழி கணனி மயப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆவணப்படுத்தல் அல்லது ஆவணமாக்கல் என்பது ஒன்றைப் பற்றிய அறிவுக்குத் தேவையான தகவல்கள் அல்லது தரவுகளைப் பெறுதல் அல்லது உருவாக்குதல், ஒழுங்கமைத்தல், பாதுகாத்தல், பகிர்தல் போன்ற செயற்பாடுகளைக் குறிக்கின்றது. ஆவணமாக்கல் குறித்த ஒரு பொருள் அல்லது அமைப்பு அல்லது செயல்முறையில் உள்ள சில இயற்பண்புகளை விவரணப்படுத்துவதற்குப் பயன்படுகின்ற ஊடகப் பருப்பொருளாக எடுத்தாளப்படுகிறது. ஆவணம் (Document) ஆவணப்படுத்தல் (Documentation) ஆவணவகைப்படுத்தல் (Archiving), பேணிப்பாதுகாத்தல் (Preservation) போன்ற சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட சொற்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பதிவுகள், தரவுத் தொகுப்புக்கள் (Records) ஆவணங்களாகவும் அவை சேகரிக்கப்படும் நிலையில் ஆவணப்படுத்தலாகவும் அவற்றைப் பேணிப்பாதுகாக்குமிடம் ஆவணக்காப்பகமாகவும் சுட்டப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் நூல்களுக்கும் அருங்காட்சியகம் பொருட்களுக்கும் முதன்மை கொடுப்பது போல அனைத்துவிதமான ஆவணங்களையும் முதன்மை மூலங்களாகக் கொண்டிருப்பது ஆவணவகம் எனப்படுகிறது. பெரிய நூலகங்கள் தமக்குள்ளே ஆவணக்காப்பகத்தையும் அரும்பொருட் காட்சியகத்தையும் கொண்டமைந்திருக்கின்றன. திருமதி ஶ்ரீகாந்தலட்சுமி அவர்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகத்தை அவ்வாறே உருவாக்க முற்பட்டார்.

சர்வதேச ஆவணக்காப்பிற்கான பேரவையானது (International Council on Archives) "சர்வதேச ஆவணக்காப்புத் தினத்தை" அறிவித்தது. இதனூடாக சர்வதேச அளவில் "ஆவணப்படுத்தல்" தொடர்பான விழிப்பூட்டலை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றது. நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் பல்வேறுபட்ட ஆய்வுகளுக்குத் துணைநிற்கக் கூடிய ஆவணங்களைத் தேடிக்கண்டடைந்து அவற்றை அழியவிடாது பாதுகாப்பதோடு அவற்றை எண்ணிமப்படுத்தும் செயற்றிட்டத்தையும் 2012 இல் 'Endangered Archive Program' (EAP) செயற்றிட்டத்தையும் பிரித்தானிய நூலகம் நடைமுறைப்படுத்தியது. இச்செயற்றிட்டம் இன்றுவரை பலநாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஈழத்து நூல்களை எண்ணிமப்படுத்தி வரும் 'நூலக நிறுவனம்' இச்செயற்றிட்டத்திற் பங்கேற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (noolaham Foundation.org / blog? p = 368)

தமிழில் ஆவணப்படுத்தல் எனும் சொல் சமகாலத்தில் "குறித்த ஒரு விடயத்தின் அல்லது பொருளின் வரலாற்றை பதிவு செய்து அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் செயல்முறைக்குக் கையளித்தல்" எனும் பொருளிலேயே அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் ஆவணம் ஒன்று 'பதிதல், மதிப்பிடல், தெரிவு செய்தல், அதனைப் பேணுதல், பரவலாக்கம் செய்தல், அணுக்கம் மற்றும் பயன்பாடு' எனும் பல்வேறு படித்தரங்களின் ஊடாகவே உருவாக்கப்பட்டுப் பேணப்படுகிறது. அதேவேளை குறித்த ஆவணம் வெளியிடப்பட்ட பதிவுகளையும், வெளியிடப்படாத அல்லது வெளியிடமுடியாத பதிவுகளையும் கொண்டதாகவும் வாய்மொழி வரலாற்றை உடையதாகவும் பதிவேட்டு முகாமைக்கு உட்பட்டதாகவோ உட்படாததாகவோ அமைந்திருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த ஆவணம் வரலாற்றை மட்டும் உள்ளடக்கியதல்ல. அது தனிமனிதர், சமூகம், தேசம் என்பவற்றினது அசைவியக்கம், பாரம்பரியம், பண்பாடு, தொன்மை, மொழி, பொருளாதாரம், அரசியல், சமயம் எனப்பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியிருக்கவும் அதிக வாய்ப்புண்டு.

ஆவணப்படுத்தல் எனும் செயல்நிலை 'Documentation', 'To document' என ஆங்கிலத்தில் சுட்டப்படுகிறது. Documentation என்பதைப் பொருள் (document) அல்லது ஆவணம் எனவும் செயல்முறை (Process) எனவும் விளக்கப்படுகிறது. அதேவேளை இது ஆவணக்காப்பகவியலில் உண்மையான தரவுகளையும் சான்றுகளையும் தருகின்ற ஆவணங்களாக ஒரு பரிவர்த்தனைச் செயல்முறையின் பயனாக உருவாக்கப்படுபவையாகக் கருதப்படுகின்றன. ஆவணப்படுத்தல் என்பது ஒரு பரிவர்த்தனை செயல்முறையின் போது நிகழ்ந்த அனைத்து நடவடிக்கைகளையும் அப்போது உருவாக்கப்பட்ட அல்லது சேகரம் செய்யப்பட்ட அனைத்துப்பதிவுகளையும் குறிப்பதாகச் சுட்டப்படுகிறது.

இவ்வாறான ஆவணங்களை வைத்து ஆவணப்படுத்துகின்ற, பேணிப்பாதுகாக்கின்ற இடம் ஆவணக்காப்பகம் எனப்படுகிறது. நூலகங்கள், அருங்காட்சியகங்கள், பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட பல நிறுவனங்களில் காப்பக ஆவணங்கள் பேணப்பட்டு வருகின்றன.

ஆவணக்காப்பகங்களை

1. தனியார் ஆவணக்காப்பகங்கள். (குரும்பசிட்டி கனகரத்தினத்தின் உலகத் தமிழர் ஆவணக் காப்பகம்)
2. சமூக ஆவணக்காப்பகங்கள் (noolaham.org)
3. தேசிய ஆவணக்காப்பகங்கள். (தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம்)
4. ஏனைய ஆவணக்காப்பகங்கள். (பல்கலைக்கழக நூலகங்கள்)

எனபகுத்துரைக்கலாம்.

இக்காப்பகங்களில் வரலாற்று ஆதாரமான அல்லது பிற ஆராய்ச்சிகளுக்கான ஆதாரமான பெறுமதியைக் கொண்ட ஆவணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பகப்படுத்தல் வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்கள் ஒடுக்குமுறையில் இருந்து மீண்டெழவும் தம்மை மீள்கட்டமைப்புச் செய்யவும் தம்மைத் தாமே அறிந்து விழிப்புணர்வு கொள்ளவும் தமது தொன்மையை, பாரம்பரியத்தை, பண்பாட்டை, மொழி வரலாற்றை, நாகரிகத்தை தெரிந்து கொள்ளவும் கைக்கொள்ளவும் இவ்வாவணங்கள் உதவுகின்றன.

ஆவணவாக்கத்தை மூலவகை ஆவணவாக்கம், கருவி வகை ஆவணவாக்கம் என இருபெரும் பிரிவாக வகைப்படுத்தலாம். மூல வகை ஆவணவாக்கத்தில் தரவு, நிகழ்வு மற்றும் தகவல்கள் உள்ளது உள்ளபடியே பதியப்படுகின்றன. இது சுவடிப்படியெடுப்பு முதற்கொண்டு முழுப்பாட ஆவணப்படுத்தல் செயற்பாடுவரை உள்ளடக்குகின்றது. ஏலவே உள்ள மூல ஆவணத்தை பாதுகாப்பு மற்றும் பயன்பாடு கருதிப் படியெடுத்தல், குறிப்பிட்ட ஒரு ஆவணம் பல பிரதிகளைக் கொண்டிருக்கும் பட்சத்தில் அவற்றைப் பரிசோதித்து, ஒப்பு நோக்கி மூல ஆவணத்தை இனங்கண்டு பதிப்பித்தல், பலதரப்பட்ட வெளியீடுகளிலும் வெளிவந்த குறிப்பிட்ட படைப்பாளரின் ஆக்கங்களை அல்லது குறிப்பிட்ட துறைசார்ந்த ஆவணங்களைத் தேடிச் சேகரித்து தொகுத்து வெளியிடுதல், கள ஆய்வின் மூலம் வாய்மொழி வரலாறுகள் மற்றும் பாடல்களைப் பதிதல், பண்பாட்டு நிகழ்வுகளை ஆவணப்படுத்தல் போன்றவை மூலவகை ஆவணவாக்கத்தில் உள்ளடங்கும். கருவி வகை ஆவணவாக்கமானது ஆய்வாளர்களின் இலகுவான பயன்பாட்டைக் கருத்திற் கொண்டு குறிப்பிட்ட எழுத்தாளர் சார்ந்த அல்லது துறை சார்ந்த நூல்களை முறைப்படி பட்டியலிடுதல் என்பதாகும்.

ஆவணவாக்கத்தினை பண்புகளின் அடிப்படையில் 'பதிப்புசார் ஆவணவாக்கம், தொகுப்புசார் ஆவணவாக்கம்' என இருவகைப்படுத்தலாம். பதிப்புப் பணி என்பது நூல் ஒன்றை புதிதாக உருவாக்கி அதனை வெளியிடும் செயற்பாடு மற்றும் அச்சிடுதல் செயற்பாடு போன்றவை என்றே கருதப்படுகின்றது. இங்கு அச்சிடுதல், பதிப்பித்தல், வெளியிடுதல், மீள்பதிப்பு ஆகிய நான்கு பதங்களும் வேறு வேறு. ஏற்கனவே உள்ள ஒன்றைத் திருத்தம் செய்தோ அன்றி செய்யாமலோ மீள வெளியிடுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புப் பணி. ஆக்கம் ஒன்றை அந்த ஆக்கத்தின் ஆக்கவியளாளரோ வேறு தனிநபரோ அல்லது நிறுவனமோ பொறுப்பேற்று வெளியிடுவது வெளியீட்டுப் பணி. வெளியிடுவதற்கான அச்சிடுதல் பணிகளை மேற்கொள்வது அச்சிடுதல் பணி. வெளியிட்ட பிரதிகள் போதாதபோது அதனை இற்றைப்படுத்தாமலோ, மீளாய்வு செய்யாமலோ அப்படியே மீள வெளியிடுவது மீள்பதிப்பு. சமூகத்தில் குறிப்பிட்ட ஆக்கத்தின் ஆசிரியர் அறியப்படாதவிடத்து பாதுகாப்பு நோக்கங்கருதியும் பயன்பாடு கருதியும் அதனைப் மீளப்படியெடுத்தல், பருவ இதழ்களில் அல்லது மாநாட்டு வெளியீடுகளில் வெளியிடும் பொருட்டு பதிப்புக்குழு ஒன்றினூடாக ஆய்வுக் கட்டுரைகளை அதன் ஆசிரியரைக் கொண்டே திருத்துவித்தல், பலதரப்பட்ட வெளியீடுகளிலும் வெளிவந்த குறிப்பிட்ட துறைசார்ந்த அல்லது குறிப்பிட்ட எழுத்தாளர் சார்ந்த ஆக்கங்களை தேடிச் சேகரித்து ஒழுங்குபடுத்தி வெளியிடுதல் போன்றவை பதிப்புப் பணிகளில் உள்ளடங்கும்.

தொகுப்புப் பணி என்பது குறிப்பிட்ட பொருள் சார்ந்த தரவுகள், தகவல்கள் நிகழ்வுகள் போன்றவற்றை பலதரப்பட்ட ஆவணம் சார்ந்த மற்றும் ஆவணம் சாராத தகவல் வளங்களிலிருந்து தேடிச் சேகரித்து பதிப்பித்தலை இது குறிக்கின்றது. நூலகவியல் நோக்கில் தொகுப்புப் பணி எழுத்துக்களின் தொகுப்புகளுடன் மட்டுப்படுத்தப்பட்டுவிடுகின்றது. இது தனித்த ஒரு எழுத்தாளரின் பல ஆக்கங்களை தொகுத்தலாகவோ அல்லது பல எழுத்தாளர்களின் ஆக்கங்களின் தொகுப்பாகவோ அமையக் கூடியது. பரந்த நோக்கில் குறிப்பிட்ட கால வரையறையில் குறித்த துறை சார்ந்த அல்லது குறித்த படைப்பாளர் சார்ந்த ஆக்கங்களின் விபரங்களைப் பட்டியலிடுகின்ற செயற்பாடும் தொகுப்புப்பணியாகவே பார்க்கப்படுகின்றது.

ஆவணப்படுத்தல் என்பது பதிதலும் சேகரித்தலும் அல்ல. குறித்த ஆவணங்களை மதிப்பிடுதல், சேகரித்தல், அட்டவணைப்படுத்தல், பட்டியற்படுத்தல், விபரித்தல், பரவலாக்கம் செய்தல், பேணிப்பாதுகாத்தல், உரிய பயனர்க்கு உதவுதல் எனப் பல்வேறு செயல்நிலைகளை உடையது. எழுத்துரு ரூப ஆவணங்கள் (கட்டுரை, கவிதை, புனைவு, மீபுனைவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணப்படங்கள், ஓவியங்கள், ஊடகத்தயாரிப்புக்கள் போன்ற குறித்த நிகழ்வைப் பதிவு செய்யும் செயற்பாடாக ஆவணப்படுத்தல் அமைகின்றது.

தனிமனிதர், குடும்பம், குழுமம், கிராமம், மாவட்டம், பிராந்தியம், தேசம் என்ற வகையிலும் இனம், சமயம், மொழி, வர்க்கம் என்ற வகையிலும் ஆவணப்படுத்தல்கள் பலதளங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. பிறப்புச்சான்றிதழ், கடிதம், குடும்ப அட்டை, குறிப்பேடுகள், அறிக்கைகள், நாட்குறிப்பேடுகள், உரிமைப் பத்திரங்கள், காணி உரிமங்கள், அழைப்பிதழ்கள், பத்திரிகைகள், நூல்கள், புழங்குபொருட்கள், கல்வெட்டுக்கள் என வாழ்வோடு இணைந்த அத்தனை விடயங்களும் ஆவணங்களாகும். இன்று தேவையற்ற ஒன்று எனக் கருதக்கூடிய ஒன்று எதிர்காலத்தில் மிகத்தேவையான ஆவணமாகலாம். ஆகவே ஆவணப்படுத்தல் என்பது ஒரு சமூகத்தின் தொடர் செயற்பாடாக அமைதல் அவசியமாகும். அதேவேளை ஆவணத்தின் நம்பகத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு உண்மை ஆவணம் அல்லது நல்ல ஆவணம் என்றும் போலி ஆவணம் என்றும் இரண்டாகப் பகுத்து நோக்கலாம். உண்மை ஆவணம் என்பது மீளமீள உறுதிப்படுத்தத்தக்க வகையிலும் பிழைகள் நீக்கப்பட்டதாகவும் தெளிவானதாகவும் அமையும். போலி ஆவணம் என்பது நகலாகவும், சிதைவுகள் பொருந்திய, தகவலைத் திரட்டுவதில் சிக்கல்களை ஏற்படுத்துவதாகவும் தெளிவற்றதாகவும் அமைகின்றது. ஆகவே ஆவணங்களை உரியகாலத்தில் உரிய முறையில் ஆவணப்படுத்துதல் மிகவும் அவசியமாகின்றது.

1.3. ஈழத்து இதழியல்கள்

ஐரோப்பிய வருகையின் பின் ஏற்பட்ட சுய இராட்சிய வீழ்ச்சி கீழைநாடுகளின் தனித்த அடையாளங்களை சிதைத்துவிட்டது. காலனித்துவ ஆட்சியாளர்களின் அதிகார அடக்குமுறைக்கு ஆட்பட்டு அடிமைகளாகி உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாகி தம் பெருமை தாமறியாப் பாமரராகினர் கீழைநாட்டு மக்கள். ஈழநாடும் இதற்கு விதிவிலக்கல்ல. போர்த்துக்கேயர்கள் ஈழத்தின் கரையோர ஆட்சியை கைப்பற்றியதுடன் சுதேசிகளின் வழிபாட்டுத் தலங்களைத் தரைமட்டமாக்கித் தமது கத்தோலிக்க தேவாலயங்களைக் கட்டினர். பின்வந்த ஒல்லாந்தர்களோ அவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்து புரட்டஸ்தாந்து தேவாலயங்களைக் கட்டினர். ஒல்லாந்தரது அரசாங்கத்தில் வைத்திலிங்கம் செட்டியாருக்கு இருந்த செல்வாக்கின் ஊடாக 1795 இல் வண்ணார் பண்ணைச் சிவன்கோயில் கட்டப்பட்டது. இவ்வாலயத்தின் எழுச்சியோடுதான் சுதேசப் பண்பாட்டு எழுச்சி மீள முளைகொள்ளத் தொடங்குகிறது.

ஒல்லாந்தரின் பின் ஈழநாட்டை ஆண்ட பிரித்தானியர்கள் 1815 இல் கண்டி இராட்சியத்தைக் கைப்பற்றியதனூடாக ஈழநாட்டை ஒற்றை ஆட்சிக்கு உட்படுத்தினர். கத்தோலிக்கத்தை முன்னிறுத்தினர். அதேவேளை புரட்டஸ்தாந்து மிஷனரிகளுக்கும் இடமளித்தனர். கல்வி, ஆங்கில மொழி, பாடசாலை எனும் முக்கூட்டியல் முதன்மைப்படுத்தப்பட்டது. அரச உத்தியோகம் கற்றவர்களுக்கு வழங்கப்பட்டது. நவீனத்துவம் – ஐரோப்பிய ஆங்கில கலாசாரம் உள்நுழைந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த இம்மாற்றங்கள் சுதேச மக்களின் வாழ்வில் சமாந்தரமாக நன்மைகளையும் தீமைகளையும் ஏற்படுத்தியது.

மத்தியகால ஐரோப்பாவில் அச்சியந்திரத்தின் வருகை பெருமாற்றங்களுக்கு அடிகோலியது போல கீழை நாடுகளுக்கு அது கொண்டுவரப்பட்ட போது பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. வாய்மொழிப் பாரம்பரியத்தில் எழுத்தின் வருகை வலிதாந்தன்மையை நல்கியதைப் போல அறிவின் பரம்பலுக்கு அச்சுக்கலை பெரும் வேகத்தையும் வலிதாந்ததன்மையையும் அளித்தது (Edword sapir, 1963,pp.78 – 80). இந்திய இலச்சினைகளின் பிரதியெடுத்தல் முறைமை அச்சாக்கச் செயற்பாடாகக் கருதப்படுகிறது. அச்சுக்கலையின் முன்னோடிகளாக சீனர்கள் கருதப்படுகின்றனர். அதேவேளை ஜேர்மனியரான "குட்டன்பார்க்" என்பவர் தனித்தனி எழுத்துக்களை உருவாக்கி அதனைக் கோர்க்கும் முறையினூடாக நவீன அச்சுக்கலையை உருவாக்கினார். (சம்பந்தன். மா.சு., 1960, பக்.68 – 69) ஐரோப்பா எங்கும் பரவிய அச்சுக்கலை அவர்களின் காலனித்துவத்துக்குட்பட்ட நாடுகளுக்கும் பரவியது. ஈழநாட்டில் சிங்கள, தமிழ் மொழிகளின் பரந்த வளர்ச்சியிலும் ஆங்கில மொழிப் பரவலாக்கத்திலும் அச்சுக்கலை பெரும்பங்காற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயர் 1556 இல் சமயம் பரப்பும் நோக்கோடு அச்சியந்திரங்களையும் அச்சுப்பணியாளர்களையும் இந்தியாவிற்கு இட்டுவந்தனர். (Natarajan,s., 1962, p.4) போர்த்துக்கேய மொழியிலிருந்து தமிழுக்கு முதன் முதல் மொழிபெயர்க்கப்பட்டு "லூசோ" சமய வினாவிடை எனும் நூல் வெளியிடப்பட்டது. இந்திய மொழிகளில் முதன்முதல் அச்சடிக்கப்பட்ட நூல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. 1831 இல் சென்னை கிறிஸ்துவ ஞானசங்கம் "தமிழ்ப்பத்திரிகை" (Tamil magagine) எனும் இதழை வெளியிட்டது. பிரித்தானியராட்சியில் 1835 இல் அச்சகம் அமைக்கின்ற உரிமை சுதேசிகளுக்கு வழங்கப்பட்டது.

ஈழநாட்டில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கி.பி 1737இல் சிங்கள மொழி நூலும் 1739 இல் தமிழ் கிறிஸ்தவ ஆராதனை நூலொன்றும் வெளியிடப்பட்டது. (Dennid, E., Rhodes, 1969, p.67) கி.பி 1802 இல் பிரித்தானிய அரசால் இலங்கையின் முதலாவது பருவ இதழான அரசவர்த்தமானி மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டது. ஆறுமுகநாவலரின் எழுச்சி, அச்சியந்திரப் பயன்பாடு என்பன ஈழத்துத் தமிழ்ப்பரப்பில் பல நூல்களை, துண்டுப்பிரசுரங்களை உற்பவித்தன. உரைநடை பாவனைக்கு வந்தது. நாவலர் உரைநடை வல்லாளராகப் போற்றப்பட்டார். ஏடுகள் எழுதா எழுத்தின் வழி அச்சுப் பதிக்கப்பட்டு காகிதாகிதங்களின் வழி ஆவணப்படுத்தப்பட்டன. வெகுசனங்களுக்கு வழங்கப்பட்டன. நிறுத்தற்குறிப்பயன்பாடு தமிழில் பரவலாயிற்று. ஆறுமுகநாவலர் தமிழ் நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் அச்சியந்திரசாலைகளை நிறுவி சைவத் தமிழ்ச் சமூகத்திற்கு அளித்த நூல்கள், பதிப்புக்கள் ஏராளம்.

1.3.1 **யாழ்ப்பாணத்து இதழ்கள்**

மைக்முரே (Murtrie) யாழ்ப்பாணத்தில் முதன் முதல் 1818 இல் நல்லூ ரில் அச்சியந்திரசாலை நிறுவப்பட்டதாகக் கூறுகிறார். ஆயினும் 1834இல் மானிப்பாயில் ஆரம்பிக்கப்பட்ட அமெரிக்க மிஷன் அச்சுக்கூடமே முதன்மை பெற்றிருந்தது. இவ்வச்சுக்கூடத்திலிருந்து முதல் தமிழ்ப் பத்திரிகையான உதயதாரகை 1841 இல் வெளிவரத் தொடங்கியது. (Lyman s. Kulathungam, 1941, p.12). உதயதாரகை கிறிஸ்தவ சமயப்பின்னணியை கொண்டதாயினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்முக அறிவைப் பரப்பும் வெகுஜன தொடர்பு சாதனமாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை கி.பி 1832 இல் தனிச் சிங்களத்தில் "மாசிகதாக" எனும் பத்திரிகை வெளிவந்துள்ளது.

இதற்குப் பின் சைமன் காசிச்செட்டியால் உதயாதித்தன் (1841) கொழும்பில் வெளியிடப்பட்டது. உரைக்கல்லு (1845) எனும் பத்திரிகை கொழும்பில் இருந்து வெளிவந்ததாக அறியமுடிகிறது. இவைதவிர யாழ்ப்பாணத்தில் சி.வை.கதிரவேற்பிள்ளையால் இலங்காபிமானி (1863) றொபேட்நியூட்டனால் இலங்கைக் காவலன் (1864) என்பனவும் வெளியிடப்பட்டன. பின் எம்.எம். சின்னத்தம்பியால் 1877இல் சைவச்சார்புடைய இலங்கைநேசன் வெளியிடப்பட்டது. சைவப்பிரகாச சமாஜம் 1880இல் "சைவ உதயபானு"வை வெளியிட்டது. சைவபரிபாலன சபை 1889 இல் Hindu ogrgan எனும் ஆங்கிலப்பத்திரிகையும் இந்துசாதனம் எனும் தமிழ்ப் பத்திரிகையையும் வெளியிட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவான இப்பத்திரிகைகள் யாவும் சமயவாதத்துக்கு மிகுந்த முதன்மையளித்ததோடு பிறமத கண்டனங்களிலும் ஈடுபட்டன. அதேவேளை இவை சமூகம் சார்ந்த சமாசாரங்களையும், கலை, பண்பாடு சார்ந்த விடயங்களையும் தாங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

இவைதவிர வைமன் கதிரைவேற்பிள்ளையின் "வித்தியாதர்ப்பணம்" (1853), தம்பிப்பிள்ளையின் "சன்மார்க்கப் போதினி" (1884), மற்றும் விஞ்ஞானவர்த்தினி (1884) போன்ற இன்னும் சில பத்திரிகைகளும் எடுத்துரைக்கப்படுகின்றன.

1.3.2. யாழ்ப்பாணத்தில் இதழ்களின் வளர்ச்சிக்கான காரணங்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அச்சியந்திர வருகையுடன் ஆரம்பமான பத்திரிகைகளின் அதிகவரவு இன்றுவரை யாழ்ப்பாணத்தில் குறைவடையவில்லை. இதற்கான காரணங்களாகப் பின்வருவனவற்றை நோக்கலாம்.

1) பெருந்தொகையான மிஷனரிகளின் வருகையும் அதனூடாக அச்சியந்திரங்களினது பெருக்கமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) தத்தம் சமயப் பரப்புகையில் சமயவாதிகள் காட்டிய அதிதீவிர ஈடுபாடு அதிக பத்திரிகைகளை உருவாக்கின.
3) படித்த மத்திய தரவர்க்கத்தின் உருவாக்கமும் அரச உத்தியோகத்து டனான வாழ்வும்.
4) போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் வளர்ச்சி ஆரம்பத்தில் பல பத்திரிகைகள் வெளிவரவும் அது பின்னர் பழக்கப்பட்டுப் போகவும் காரணமாயிற்று.
5) யாழ்ப்பாண கற்ற மத்தியதரவகுப்பினர் தென்னாசிய நாடுகள் எங்கும் பரவித் தொழில் (குறிப்பாக அரச பணியாளர்) வாய்ப்புக்களைப் பெற்றதும் அதிக பணப்புழக்கமும்.
6) யாழ்ப்பாணத்தவர் எங்கு வாழினும் தேசத்தின் விடயங்களை, தம்மவர் பற்றிய விபரங்களை அறிய ஊடகமாக பத்திரிகைகள் உதவியமை
7) வாசிப்புப் பழக்கம் பெருகியமை, பொழுதுபோக்கு மற்றும் தத்தம் அந்தஸ்த்தைக் காட்டப் பத்திரிகை வாங்குதல் முதலானவை
8) அச்சியந்திர சாலை, பத்திரிகை சார்ந்த தொழில் துறையின் வளர்ச்சி

போன்றவற்றைப் பொதுவில் குறிப்பிடலாம். அதேவேளை சமயப்பத்திரிகைகளே அதிகம் வெளிவந்தன என்பது கவனத்துக்குரியதாகிறது. சத்திய வேத பாதுகாவலன் (1901), விவேகானந்தன் (1902), ஆத்மபோதினி (1907), சைவசூக்குமார்த்த போதினி (1907), ஞானசித்தி (1908), இந்து பாலன போதினி (1908), விஜயலஷ்மி (1910), உண்மை தூதன் (1910), சைவபாலிய சம்போதினி (1910), மஹாவிஜயலஷ்மி (1910), கலியுகவரதன் (1911), சண்முகநாதன் (1911), விச்சுவகர்மன் (1912), பாலபாஸ்கரன் (1915), ஆந்தசாகரம் (1921), சைவசித்தாந்த பானு (1924), அந்தோனியார் தூதன் (1925), கலிகாலதீபம் (1927), பஞ்சசக்தி (1930) போன்ற இன்னும் சில சமயப் பத்திரிகைகள் காலனித்துவ காலத்தில் வெளிவந்தன.

இக்காலப்பகுதியில் சமய இதழ்கள் அதிகம் வெளிவந்தமைக்கு பின்வருவனவற்றைக் காரணங்களாகக் குறிப்பிடலாம்.

1. பிரித்தானியர் கால மிஷனரிகள் சமய பிரசாரத்துக்கான பிரதான வழிமுறைகளாக பத்திரிகைகளைக் கருதியமை.
2. சமய வாதப்பிரதிவாதங்களுக்கு இடமளித்தமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சமயப் பத்திரிகைகள் மக்களின் கலை, பண்பாட்டம்சங்களையும் ஏனைய சமாசாரங்களையும் தாங்கி வந்தமை.
4. சமய அபிமானமும் தன்னார்வத் தூண்டுதலும்.
5. பெருந்தொகையாக வெளிவந்த வேகத்தில் தனிமனித முயற்சி என்பதால் காணாமலும் போயின. அதேயளவு புதியனவும் தோன்றின. இவை தனிமனித ஆர்வ நிலைப்பாடாக அமைகின்றன.

இந்துசாதனம் இன்றும் வெளிவருகின்றது. இந்துஒளி, அருள்ஒளி, ஞானசுடர், தென்னாடு முதலான இதழ்கள் இன்று வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இதழ்கள் என்பது தனியே பத்திரிகைகளை மட்டுமல்லாது சஞ்சிகைகள், சிறப்புமலர்கள், நினைவு மலர்கள் போன்றவற்றையும் குறிக்கின்றன. அந்தவகையில் சமய சஞ்சிகைகளாக ஞாயிறு (1933), நாவலன் (1935), ஆனந்தசாரம் (1960), ஆத்ம ஜோதி (1947), இந்து இளைஞன் (1960), அருளமுதம் (1961), பகவதி (1964), அருளொளி (1967), ஒளி (1971), மெய்கண்டான் (1982) போன்ற இன்னும் பல உருவாகின.

1.3.3 **சமய இதழ்களின் சமூகப் பெறுமானம்.**

அமெரிக்கரான "நதானியல் வில்லிஸ்" என்பவர் கிறிஸ்தவ சமய பிரசாரத்துக்கென துண்டுப்பிரசுரங்களையும் சிறுநூல்களையும் வெளியிட்டுத் திட்டமிட்டு உருவாக்கிய "சமயப்பத்திரிகை உலகம்" காலப்போக்கில் உலகம் எங்கும் பரவியது. ஈழத்துக்கும் வந்தது.

பொதுவில் கணித, விஞ்ஞான கற்கைத்துறைகளுக்கும் அது சார்ந்த எழுத்துருக்களுக்கும் மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுக்கும் போக்குக் காணப்படுகிறது. அடுத்ததாக சமூகம், அரசியல், கலை, இலக்கியம் சார்ந்த எழுத்துருக்கள் முதன்மை பெறுகின்றன. தினசரிப்பத்திரிகைகள் அன்றைய பயன்பாட்டுக்குரியனவாகவும் மறுநாள் அது பழைய பத்திரிகையாகவும் பொருட்களைச் சுற்றிவைக்க, உணவுப் பொதி கட்ட, மேசையில் விரிக்க என அதன் பயன்பாடு மாறிவிடுகிறது. பத்திரிகைகள் வெளிவந்த அன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு இருக்கின்ற சமூகப் பெறுமானம் மறுநாள் காணாமல் போய் அது பழசு ஆகிவிடுகிறது. பயன்பாடும் மாறிவிடுகின்றது. அதன் பெறுமானம் உடனடியானது மட்டுமாகவே காணப்படுகிறது.

தினக்கலண்டரில் வருகின்ற சாமிப்படம் அவ்வருடம் முழுவதும் மலரிட்டு, தூபமிட்டு வணங்கப்படுவதாகவும் வருடம் முடிய குப்பைக்கும் போவதாகவும் இருப்பதை நாம் சமூகத்தில் அவதானிக்கலாம். ஆனால் இப்பத்திரிகைகளில் வரும் சுவாமிப்படங்களுக்கோ, செய்திகளுக்கோ, பாடல்களுக்கோ, கட்டுரைகளுக்கோ, புனைவுகளுக்கோ அம்மரியாதை கூட வழங்கப்படுவதில்லை. இருபதாம் நூற்றாண்டின் தொடக்ககாலத்தில் இருந்த சமயப் போட்டி, சமய ஈடுபாடு, சமூக அக்கறை, கற்றவர்க்கு இருந்த சமய ஈடுபாடு, சமயக்கல்வி போன்றன சமய இதழ்களை ஓரளவேனும் வாங்கவும் பேணவும் செய்தன. இன்றைய உலகமயமாதற் சூழல், தொழில்நுட்ப விஞ்ஞான அறிவு போன்றன சமய ஈடுபாடுகள், நம்பிக்கைகள், பேணுகைகள் என்பவற்றை எவ்வண்ணம் குறைத்ததோ சுயநலம்மிக்க மனிதர்களை உருவாக்கி வருகின்றதோ அதேபோல சமய இதழ்களிற்கு பெறுமானமற்ற, இலவசமாக வழங்கினாலும் அதனைப் பெறவிரும்பாத மனநிலைகளை சமயிகளிடம் ஏற்படுத்தியுள்ளது.

1.3.4 சமயப்பத்திரிகைகளின் கட்டமைப்பு

உதயதாரகை, இந்துசாதனம் போன்ற பத்திரிகைகளை ஒத்தே பெரும்பாலான ஆரம்பகாலப் பத்திரிகைகள் தோற்றம் பெற்றன.

1. வெள்ளைத்தாளில் கருப்பு மை பயன்படுத்தப்பட்டிருந்தது.
2. பத்திரிகைத் தலைப்பு அலங்கார எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்தது.
3. பத்திரிகைப் பெயரோடு தொடர்புடைய தெய்வங்களின் உருவங்கள், சமயக்குறியீடுகள் பெயரின் கீழ் காணப்பட்டன.
4. ஆண்டு, மாதம், திகதி, இலக்கம் என்பன இடப்பட்டிருந்தன.
5. பெரும்பாலும் நான்கு, எட்டு பக்கங்களை உடையனவாகக் காணப்பட்டன.
6. ஆரம்பகாலப் பத்திரிகைகள் சிறிய எழுத்துக்களில் உள்ளடக்கத்தைக் கொண்டிருந்ததோடு, விடயங்களுக்கிடையிலான வெளி (Space)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய பிரக்ஞையை கொண்டிருக்கவில்லை. விடயதானங்களை மிக நெருக்கமாகக் கொண்டிருந்தன.

7. பத்திரிகையின் இறுதிப்பக்கத்தில் வெளியீட்டாளர், பத்திராதிபர், அச்சுக்கூடம் போன்ற விபரங்கள் காணப்பட்டன.

இவ்வாறான கட்டமைப்பு முறை அந்தந்தக் காலத்தில் வெளிவந்த பத்திரிகைகள் யாவற்றினதும், பொதுவான போக்காகும். சமய அடையாளங்களைத் தாங்கியதாக வருவது தான் இவற்றின் தனியடையாளங்களாக இருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பத்திரிகைகளும், இருபதாம் நூற்றாண்டின் முன்னரை நூற்றாண்டுப் பத்திரிகைகளும் பெரும்பாலும் சமஸ்கிருதத்தில் அல்லது சமஸ்கிருதக் கலப்புக் கொண்ட சொற்களையே தலைப்பாகக் கொண்டிருந்தமை கவனத்துக்குரியதாகும். யாழ்ப்பாணத்தில் சமஸ்கிருதப் பயன்பாடு சமயத்திற்கு அப்பாலான மக்கள் பயன்பாட்டு மொழியாக இருந்துள்ளமையை இது காட்டுகின்றது.

பத்திரிகைகளை ஆவணப்படுத்தல்

இது தொடர்பாக நூற்றாண்டு கடந்த வரலாற்றை உடைய இந்து சாதனம் பத்திரிகையையும் எட்டு வருடங்களே வெளிவந்த இதுவரை ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படாத 'சைவசூக்குமார்த்தபோதினி' பத்திரிகையும் இங்கு மாதிரிகளாக எடுத்தாளப்படுகின்றன.

1.4.1 **இந்து சாதனம்**

சைவ பரிபாலன சபையினால் கி.பி 1889இல் தொடங்கப் பெற்ற இந்து சாதனம் பத்திரிகை நூற்றுமுப்பது ஆண்டுகள் கடந்தும் இன்றும் வெளிவந்து கொண்டிருக்கின்றது. யுத்த காலப்பகுதியில் இடையிடையே நின்று நின்று வந்தாலும் இன்று வரை தொடர்ந்து வருகின்ற நூற்றாண்டு கடந்த யாழ்ப்பாண சைவ சமய பத்திரிகை அதுவே. உதயதாரகை, சத்திய தேவ பாதுகாவலன் என்பன நூற்றாண்டு கண்ட கிறிஸ்தவப் பத்திரிகைகளாக திகழ்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இந்துசாதனம்

THE HINDU ORGAN.

இந்து சாதனம் முதலாம் இதழில் இருந்து முழுவதுமாகக் கிடைக்கவில்லை எனினும் நூலக நிறுவனம் கிடைத்தவற்றை ஆவணப்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், தேசிய நூலகம் உள்ளிட்ட நிறுவன நூலகங்களிலும் இந்து சாதனப் பத்திரிகைகள் குறிப்பிடத்தக்க அளவு உள்ளன. ஆயினும் இன்று வரை முழுமையான ஆவணப்படுத்தலுக்கு இப்பத்திரிகை உள்ளாகவில்லை. இதற்கான காரணங்களாக பின்வருவனவற்றை அனுமானிக்கலாம்.

1. ஆவணப்படுத்தல் தொடர்பான பிரக்ஞை மிகப் பிந்திய காலத்திலேயே ஈழத்தில் உருவானது.
2. யுத்த காலத்தில் நூலகங்கள் அழிக்கப்பட்டமை, தனிமனித சேகரங்கள் அழிந்து போனமை.
3. இந்தியா தாய்நாடு ஈழம் சேய்நாடு என்ற பாரம்பரிய மனோபாவனை
4. இன்றும் இருப்பது போலவே பத்திரிகை சேகரத்தில் ஈடுபாடின்மை, அறியாமை.
5. பத்திரிகைகளை சேகரித்துப் பராமரிப்பதில் உள்ள கடினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. இவற்றில் ஈடுபாடு உள்ள ஒருவருக்கு வீட்டில், சமூகத்தில் ஒத்துழைப்பின்மை. (கண்ட கண்ட குப்பைகளை இந்தாள் சேகரிக்குது)

மேற்படிக் காரணங்களும், பொருளாதார நாட்டமும் வருமானமற்ற இது போன்ற நடவடிக்கைகளில் தனிமனிதர்களை ஈடுபடத் தடையாய் அமைந்தன. அதனை மீறியும் பத்திரிகைகளை சேகரித்து வந்தவர்கள் முதுமையடைந்து மரணமடைய அவர்களுடைய பிள்ளைகள் அவற்றை குப்பைகளோடு சேர்த்துத் தீக்குத் தாரை வார்த்தனர். அல்லது நிறைக்கு விற்றனர். எங்கள் வரலாறு பண்பாடும் எம்மாலேயே காணாமல் ஆக்கப்பட்டது.

1.4.2 சைவசூக்குமார்த்தபோதினி

இப்பத்திரிகை வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராக இருந்த திரு.செ.கனகசபாபதிப்பிள்ளை (இராசா வாத்தியார்) என்பவரால் வேலணை மேற்கு ஊர்காவற்றுறைப் போஸ்டு, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலிருந்து வெளியிடப்பட்டது. 1907ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து 1916 வரை மாதந்தோறும் ஒரு இதழ் வெளியிடப்பட்டு வந்துள்ளது. இப்பத்திரிகை பற்றி எழுதிய பலர் வேலணை கந்தப்பிள்ளை வாத்தியர் இதனை வெளியிட்டதாகப் பதிவிட்டுள்ளனர். (அப்புத்துரை,சி. 2008) இப்பதிவு இன்றுவரை பின்பற்றப்படுகிறது. திருமதி சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார் மட்டுமே பத்திரிகையை நேரே பார்த்து சரியான பதிவினை செய்துள்ளார். (2016) செ.கனகசபாபதிப்பிள்ளை அவர்களே 'வேலணைமேற்கு நடராசா' வித்தியாலயத்தையும் நிறுவியவராவார்.

ஆரம்பத்தில் சைவசூக்குமார்த்தபோதினியை யாழ்ப்பாண விவேகானந்தா அச்சுக்கூடத்தில் அச்சடித்து வந்த பதிப்பாசிரியரும் உரிமையாளருமான கனகசபாபதிப்பிள்ளை சில ஆண்டுகளின் பின்னர் தானே நடராசா அச்சுக் கூடத்தை நிறுவி மருமகள் சொர்ணாம்பிகையின் உதவியுடன் பத்திரிகையை வெளியிட்டுள்ளார். பதிப்புப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளார். இவ்வச்சுக்கூடம் 1910 இல் நிறுவப்பட்டுள்ளது. சைவசூக்குமார்த்தபோதினியை வேலணையில் கல்வியிற் சிறந்து விளங்கிய அறிஞர்கள் பலரும் தாம் கண்ணாற் காணவில்லை என்பர். ஆயினும் எம்மால் பதினாறு இதழ்களைப் பார்க்க முடிந்தது. நூறு இதழ்கள் வரை வெளிவந்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சூக்குமார்த்த போதினி.
SAIVA SOOKUMARTHA POTHINI.

1.4.3 இவ்விரு பத்திரிகைகளின் முக்கியத்துவம்

இந்து சாதனம் 1931 வரை தனது இதழின் தலையங்கம், கட்டமைப்பு, எழுத்தளவு, விடய வெளிப்பாடு என்பவற்றில் பெரிய மாற்றங்கள் எதனையும் செய்யவில்லை. இக்காலப் பகுதியில் வெளிவந்த உதயதாரகையிலிருந்து எல்லாப் பத்திரிகைகளிடமும் ஒத்த பண்புகளாக இவை இருந்தன. சைவசூக்குமார்த்த போதினியும் அவ்வாறே வெளிவந்தது. ஈழகேசரி, வீரகேசரி போன்ற பத்திரிகைகளின் வருகைகள் தரம், சந்தை வாய்ப்பு போன்றவற்றில் ஏற்படுத்திய தாக்கம் இந்து சாதனத்தை வடிவவியல் ரீதியில் மீளமைப்புச் செய்தது. இதன்பின் குறிப்பிட்ட இடைவெளிகளில் மீளமீள வடிவ மாற்றத்திற்கு பத்திரிகை உட்பட்டு வாசகரை கவரும் வண்ணம் கட்டமைக்கப்பட்டது.

இந்து சாதனம் தனக்கான சின்னத்தை சிறிய அளவில் கொண்டமைந்திருந்தது. சூக்குமார்த்தபோதினி சின்னம் எனத் தனியே இல்லாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பக்கத்தின் மேற்பகுதியில் பத்திரிகைப் பெயரின் கீழ் வலப்புறத்தில் விநாயகர் படத்தையும் இடப்புறத்தில் நடராசர் வடிவத்தையும் கொண்டதாக அமைந்திருந்தது. காலப்போக்கில் பத்திரிகையின் தமிழ், ஆங்கிலப் பெயரின் கீழ் மத்தியில் நடராஜர் படத்தை மட்டும் தாங்கியதாக இருந்தது. இந்து சாதனம் பத்திரிகையில் பெயரின் எழுத்துரு மாற்றியமைக்கப்படும் போது பத்திரிகைச் சின்னத்திலும் மாற்றமுற்று வந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது.

இரு பத்திரிகைகளும் சைவ சமய விடயங்களுக்கு முதன்மையளித்தன. கடவுளர் பற்றியவை, வழிபாடுகள், சைவ சித்தாந்தம், நூல்கள், பக்தி நூற்பெருமைகள், சைவத்தின் தொன்மை, சிறப்பு முதலான பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இரு பத்திரிகைகளினது பெயர்களும் தமிழ், ஆங்கில மொழிகளில் அமைந்திருந்தன. சமஸ்கிருதம் கலந்த மொழி நடை பயன்படுத்தப்பட்டுள்ளது.

'சமாசாரம்' என்ற தலைப்பில் சமூகத்தில் நடைபெற்ற பல புதினங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மக்களுக்கு உதவுகின்ற தகவல்கள் (உதாரணம் – புன்குடுதீவுக்கு தபால் விநியோகிக்கும் நாட்கள் பற்றிய விபரம்) வெளியிடப்பட்டுள்ளன. இந்து சாதனம் உலகம் பலவிதம் முதலான நவீன ஆக்கங்களை, புனைவிலக்கியங்கள், கவிதைகள் போன்ற பல்வேறு அம்சங்களைக் கொண்டமைந்திருந்தது. ம.வே. திருஞானசம்பந்தபிள்ளையின் உலகம் பலவிதம் வரலாறு, சம்பவ சித்தரிப்புகள், கதைகள், நாவல்கள், உண்மை சம்பவங்கள் எனப் பல விடயங்களை உள்ளடக்கி இருந்தது.

சமய, தத்துவ, மொழி, சமூக வளர்ச்சிக்கு பாடுபட்ட அறிஞர்கள் தலைவர்களின் மறைவுகள், பணிகள், முக்கியத்துவம் உள்ளிட்ட தனிநபர் ஆவணங்கள் காணப்படுகின்றன. அரசியல் சார்ந்த பதிவுகளும் உள்ளன.

பத்திரிகை கிரயம் எனும் பகுதி பத்திரிகை விநியோகிக்கப்பட்ட உள்ளூர் வெளியூர் கட்டண விபரங்களும் வெளிநாடுகள் அவற்றுக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டண விபரங்களையும் கொண்டமைந்துள்ளன. இந்து சாதனம் ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணம், வெளியூர், இந்தியா போன்ற இடங்களுக்கே விநியோகிக்கப்பட்டுள்ளது. ஆனால் சைவசூக்குமார்த்தபோதினி இவ்வூர்களுக்கும் இந்தியாவுக்கும் விநியோகம் செய்யப்பட்டதோடு சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளமையை அறிய முடிகிறது. விளம்பரக் கட்டண விபரங்களும் உள்ளன. நூல்கள், மருந்துகள், எண்ணெய்கள், நிதி நிறுவனங்கள், மூக்குக் கண்ணாடிகள் என பல்வேறு வகையான வர்த்தக விளம்பரங்கள், செய்தி விளம்பரங்கள், பிற்காலத்தில் தேர்தல் விளம்பரங்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இது அக்கால உற்பத்தி பொருட்கள், இறக்குமதிப் பொருட்கள், வியாபார நடத்தைகள் உள்ளிட்ட பொருளாதார நடவடிக்கைகளையும், நுகர்வுக் கலாசாரத்தையும் ஆவணப்படுத்துகின்றன.

இப்பத்திரிகைகள் அக்கால மக்களின் பொருளாதார நிலை, கல்வி, வாழ்க்கை முறை, பழங்கால பழக்கவழக்கங்கள், வாழ்க்கைத் தரம், சமூக உறவுகள், முரண்பாடுகள், சமய பண்பாட்டு நிலைகள், சமூக மாற்றங்கள், நம்பிக்கைகள், கலை, விளையாட்டு, பொழுதுபோக்கு, சமூகப் படித்தரங்கள் போன்ற பல்வேறு அம்சங்களை இப்பத்திரிகைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. (சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார், 2016, பக். 37-42) போக்குவரத்து, தபால் விநியோகம், சோதிடம், விழுமிய கருத்துக்கள்-கதைகள் போன்ற மக்களின் அன்றாட தேவைகள், நம்பிக்கைகளை உள்ளடக்கிய விடயங்களையும் தாங்கிவந்தன.

அக்கால அச்சகங்கள், பதிப்பு முறையியல்கள், பத்திரிகையின் கட்டமைப்பியல் என்பவற்றை அறியத் தருகின்றன. அக்கால தாள்கள், எழுத்து வடிவங்கள், படங்கள், ஓவியங்கள், ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. மொழிநடை, திசைச் சொற்கள், வடசொற்களின் பயன்பாடு, நிறுத்தற்குறிப் பயன்பாடு உள்ளிட்ட பல விடயங்களை அறிய முடிகிறது.

அந்த வகையில் இப்பத்திரிகைகள் சமூகவியல், மானுடவியல், இன வரைவியல், சமயவியல், மெய்யியல், இதழியல், பதிப்பியல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியியல், வரலாறு, இலக்கண இலக்கியவியல் உள்ளிட்ட பல்வேறு ஆய்வு துறைகளுக்கான ஆவணங்களாக திகழ்கின்றன.

3.5 சமய சிறப்பு மலர்கள்

சிறப்பு மலர்கள் என்ற வகைப்பாட்டுக்குள் தனிமனிதர் சார்ந்த மங்கல மலர்களாக பொன்விழா, மணிவிழா, பவளவிழா, அமுதவிழா உள்ளிட்ட பிறந்தநாள் மலர்கள், பாடசாலை உள்ளிட்ட நிறுவனங்களின் ஆண்டு விழா மலர்கள், மாநாட்டு மலர்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளின் சிறப்பு மலர்கள், கோயில் கும்பாபிஷேக மலர்கள் உள்ளிட்ட பலவகை மலர்கள் உள்ளடங்குகின்றன. சிறப்பு மலர்கள் ஆண்டுக்கொரு முறையோ அல்லது சிறப்புத்தேவை கருதியோ தான் வெளிவருகின்றன. அந்த வகையில் குறித்த மனிதரின், நிறுவனத்தின், ஆலயத்தின், வரலாறு, பணிகள், முக்கியத்துவம் அவர் அது சார்ந்து இதுவரை வெளிவந்த ஆவணங்களின் பதிவுகள், சம்பந்தப்பட்டவர்களின் மனப்பதிவுகள், பொதுக் கட்டுரைகள் – ஆக்கங்கள் என்பவற்றைக் கொண்டவையாக சிறப்பு மலர்கள் பொதுவில் அமைந்துள்ளன. இதற்கு உதாரணமாக திருக்கேதீச்சர திருக்குடமலரும், யாகப்பர் ஆலய 125 வது ஆண்டு மலரும் பயன்படுத்தப்படுகின்றன.

1.5.1 திருக்கேதீஸ்வரம் திருக்குட திருமஞ்சன மலர் - 1976

ஈழத்தின் சைவாலயங்களில் ஒன்றாகவும், நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம்மிக்க ஈஸ்வரமாகவும் விளங்குகின்ற திருக்கேதீஸ்வரத் திருத்தலத்தில் 1976 இல் நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் போது வெளியிடப்பட்ட மலரே இதுவாகும். ஆலய திருப்பணி சபைச் செயலாளர் திரு.இ.நமசிவாயத்தை பதிப்பாசிரியராகக் கொண்டு திருப்பணி சபையால் வெளியிடப்பட்ட திருக்குடத்திருமஞ்சனமலர் இதுவென அறிய முடிகிறது.

இதில்

1. "ஆதியில் செய்யகேது தலையற்ற வன்னாள், மன்னு கேதீச்சரத்தில் திருந்து பூசைகள் செய்ய வையம் போன்ற கௌரிபங்கர் நல்லருள் ஈயுங் கோல மூவர் மூவர்ண முகப்பு படமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

திருக்கேதீச்சரம்
திருக்குடத்திருமஞ்சன மலர்

*

நள ஆண்டு ஆனி உக
(4.7.1976)

*

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை வெளியீடு

2. தருமை ஆதீனம் குருமகாசன்னிதானம் அவர்களதும், மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் குரு முதல்வர் அவர்களதும், காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களதும் அருளாசியுரைகளும்,
3. ஐம்பதுக்கு மேற்பட்ட திருக்கேதீச்சரப் பிரதிட்டா மூர்த்திகளதும், மற்றும் திருவுருவங்களினதும் கலையொழுகு நிழற்படங்களும்,
4. நாற்பதிற்கு மேலான பலவகையில் அமைந்த செஞ்சோற் புலவோர் – நல்லறிஞர் கருத்துரைக் கட்டுரைகளும் இடம்பெறுகின்றன".

(நமசிவாயம்.இ.1976) எனக் கூறியுள்ளமை மலரின் தாற்ப்பரியத்தை தெளிவுபடுத்துகிறது. இதில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளை

1. திருக்கேதீஸ்வர ஆலயம் பற்றியவை – 7
2. சைவ தோத்திர, சாஸ்திர மரபு சார்ந்தவை – 3
3. ஈழத்து சைவ மரபு சார்ந்தவை – 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஏனைய ஈழத்து ஆலயங்கள் சார்ந்தவை – 7

5. ஈழத்து சைவ அறிஞர்கள் பற்றியவை – 5

6. கலை பற்றியவை – 2

7. வழிபாடு சார்ந்தவை – 3

8. ஏனையவை – 9

எனப் பகுக்கலாம். இப்பகுப்பை பிறிதொரு துறைசார் ஆய்வாளர் மாற்றியமைக்கலாம். திருக்கேதீஸ்வரத்தின் வரலாறு, தொன்மை, சிறப்பு கேதீஸ்வர மீட்டுருவாக்குனர்கள் பற்றிய விரிவான கட்டுரைகள் உள்ளன. சைவ சித்தாந்த கருத்தியல்கள், திருமுறைகள் பற்றியும் திருமுறைப் பண்கள், கிரியைகளில் இசைக்கருவிகளின் பயன்பாடுகள் பற்றியும் கட்டுரைகள் உள்ளன.

அதேபோல ஈழத்தில் நின்று நிலவும் சைவத்தின் பிராந்திய நிலையியல், குடிசனத் தொகை, பரம்பல், சைவமறுமலர்ச்சி, ஈழத்து சைவ நூல்கள், பத்திரிகைகள், சித்தர் மரபு, கண்ணகி வழிபாட்டின் வரலாறு என்பவற்றோடு ஈழந்து சைவமரபின் செல்நெறிக்குப் பங்களித்த பெரியார்களின் வரலாறு, பணிகள் முதலியனவும் பதிவிடப்பட்டுள்ளன. ஈழத்தில் தொன்மையும், தனித்துவமும் வாய்ந்த ஆலயங்கள், கும்பாபிஷேகம் உள்ளிட்ட கிரியைகள், வழிபாட்டு முறைகள், சிவசின்னப் பெருமைகள், இறைகாதல் என பலவகைமைக் கட்டுரைகளை இம்மலர் கொண்டமைந்துள்ளது.

இம்மலரில் கட்டுரைகளே அநேகம் எனினும் பக்தி பாடல்கள், தலப் பெருமைப் பதிகங்கள் என்பனவும் இடம்பெற்றுள்ளன. மூன்று ஆங்கில மொழிக் கட்டுரைகளும் ஏனையவை தமிழ் மொழி மூலக் கட்டுரைகளுமாக அமைந்துள்ளன. இம்மலர் கும்பாபிஷேக மலராக மட்டுமன்றி தல வரலாறு, ஈழத்து சைவ சமயம், சைவப் பெரியார்கள், சைவாலயங்கள், சைவசித்தாந்த கருத்தியற் பெருமை, வழிபாட்டு முறைகள், பிராந்திய சமயப் பரம்பல், குடித்தொகை, நிலவியல், சமயக் கல்வி எனப் பல தளங்களில் கட்டமைக்கப்பட்டவையாக இவை அமைந்துள்ளன. சிங்கள பௌத்த தேசியவாத சிந்தனையும் தனிச் சிங்களச் சட்டமும், இனக் கலவரங்களும் இடம்பெற்ற சூழலின் வழி ஈழத் தமிழர் எனும் எண்ணக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரு வளர்ச்சியுற்ற காலத்தில் இம்மலர் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. ஈழத்து சைவ தமிழுக்கும் அதன் பாரம்பரியத்துக்கும் வரலாறுக்கும் இம்மலர் முன்னுரிமை கொடுத்துள்ளமை இம்மலரின் சமய அரசியல் எனலாம்.

1.5.2 புனித யாகப்பர் ஆலய 125 ஆவது ஆண்டு நினைவு மலர்

இது நினைவு மலர் எனப் பெயர் தாங்கி இருப்பினும் இது ஆண்டு மலரேயாம். இம்மலர் தேவாலயத்தின் படத்தை முகப்பில் தாங்கியுள்ளது. உள்ளே யாழ்மறைமாவட்ட ஆயர், பங்குத்தந்தை, மறை மாவட்ட பொது நிலையினர் சங்கத் தலைவர், மகரக் கொடி அல்லது குருகுலக் கொடி, புனித யாகப்பர் ஆலயம் சார்ந்த பல்வேறு குழுக்கள், பல்வேறு பணிகள், ஆலய முன்னாள் பங்குத் தந்தையர்கள், அருட்பணியாளர்கள், அருட் சகோதரிகள், எனப் பல்வேறு புகைப்படங்கள் இடம் பெற்றுள்ளன. மலர் வெளியிடப்பட்ட ஆண்டு முன்னட்டையில் குறிப்பிடப்படவில்லை. பங்குத்தந்தையின் ஆசியுரையின் கீழும் பின் அட்டையிலும் 23.6.1986 என இடப்பட்டுள்ளது. ஆகவே இம்மலர் 1986க்கு உரியது என அனுமானிக்கலாம். இம்மலர் யாழ் ஆயர், பங்குத்தந்தை, பொதுநிலையினர் சங்கத் தலைவர் ஆகியோரின் ஆசியுரைகளையும் மலர்க்குழு விபரத்தையும் தாங்கியுள்ளது. இறைத் துதிப்பாடல் இடம்பெறுகிறது. மலரில் இடம்பெற்றுள்ள 20 கட்டுரைகளில் ஆலய வரலாறு, பக்திச் சபைகளின் வரலாறு, பங்குத்தந்தையின் அனுபவம், ஆலய குருக்கள் பற்றிய விபரம், வரலாறு, வண பிதாக்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட் சகோதரிகள் பற்றிய விபரமும் வரலாறும் இடம்பெற்றுள்ளன. தவிர குருநகர் பிராந்தியத்தில் நிலவியல், வாழ்வியல், தொழில், பழமொழிகள், கல்விநிலை, மொழியியல் எனும் பன்முக வெளிப்பாட்டு ஆக்கங்களும், விடுதலை இறையியல், அழகியல், குருகுலம், மெய்யியல், நாடகவியல் பற்றிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

இம்மலர் புகைப்படங்களின் ஊடாகவும் ஆக்கங்களின் ஊடாகவும் விபரப்பட்டியல்கள் ஊடாகவும் யாழ்ப்பாண கிறிஸ்தவம், குருநகர் பற்றிய நிலவியல், பண்பாட்டியல், மொழிப் பயன்பாட்டியல், வாழ்வியல், தொழில், கல்விநிலை, கரையூர் மக்களுக்கும், குருகுலத்துக்குமான உறவியல் எனும் பல்வேறு ஆய்வடங்கல்களை தன்னகத்தை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற் சுட்டிய இரு சிறப்பு மலர்களுமே சமயவியலுக்கு அப்பாலாக காலத்தை, பிராந்தியப் பண்பாட்டை, மொழியை, வரலாற்றை, சமூக அசைவியக்கத்தை பதிவு செய்கின்ற சிறப்பு ஆவணங்களாக திகழ்வதை அவதானிக்க முடிகிறது.

1.6 சமய சஞ்சிகைகள்

பொதுவாக சமய பத்திரிகைகளைப் போலவே சமய சஞ்சிகைகளும் சமயத்தின் வரலாறு, பெருமை, அற்புதங்கள், தொன்மை கதைகள், நம்பிக்கைகள், விழுமியங்கள், வழிபாடுகள் என்பவற்றை புலப்படுத்துவதோடு ஆலய விழாக்கள், சமயப் பெரியார்களின் விழாக்கள், அவர்களது பணிகள் போன்றவற்றையும் ஆவணபடுத்துகின்றன. தத்தம் சமயம் சார்ந்த நிகழ்வுகளை தினங்களை துணுக்குகளாக கட்டுரைகளாக புகைப்படங்களாக பதிவு செய்கின்றன. பங்குபற்றியவர்களை ஆவணப்படுத்துகின்றன. விமர்சனங்கள், வாதங்கள் ஆய்வு சார் ஆக்கங்கள், பதிவுகள் என்பவற்றை உள்ளடக்கி வெளி வருகின்றன விளம்பரங்களைக் கொண்டிருக்கின்றன. நீண்டகாலம் வெளிவந்த ஆத்மஜோதி சஞ்சிகையை நாம் இங்கு மனங்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.7 நினைவு மலர்கள்

நினைவு மலர்கள் எனும் வகைப்பாடு பெரிதும் தனிமனிதப் பதிவுகளாகவே அமைகின்றன. அவை இறந்த மனிதரின் அந்தியேட்டியின்போது வெளியிடப்படும் கல்வெட்டுக்கள், ஓராண்டு நினைவு மலர் உள்ளிட்ட ஆண்டு நினைவு மலர்கள் அமரத்துவமடைந்த மனிதரின் பணிகளைப் பாராட்டி வெளியிடப்படுவன எனப் பல்வகையின. அதேவேளை நிறுவனங்களின் அழிவு மற்றும் துக்கம் சார்ந்த விடயங்களைச் சார்ந்தும் நினைவு மலர்கள் பல வெளிவந்துள்ளன. யாழ்ப்பாண சைவப் பாரம்பரியத்தில் இறந்தவரின் முப்பத்தோராம் நாள் நினைவாக வெளிவரும் மலர் கல்வெட்டு எனப்படுகின்றது. இது பண்டைய நடுகல், கந்து, இறந்தவர் பெருமையை பொறிக்கும் கல்வெட்டு, பட்டயம், ஓலை என்பவற்றின் வழிவந்த அச்சாக்க மலர் என நாம் கருதலாம். இறந்தவர்க்கு நினைவு தூபி அமைத்தல், மலர் வெளியிடல் போன்ற செயற்பாடுகள் உலகப் பொதுமைக்கும் உண்டு.

நினைவு மலரின் சமூகப் பெறுமானத்தை மதிப்பிட 'திருமதி பாக்கியலட்சுமி திருவிளங்கம்' அவர்களின் அந்தியேட்டி நினைவு மலர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி மலராகக் கொள்ளப்படுகிறது. இந்நினைவுமலர் 1969 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இதில் ஆசிரியப் பாவாலான சரமகவி அமைந்துள்ளது.

யாழ்ப்பாண சமூக அசைவியக்கத்தில் இருபதாம் நூற்றாண்டின் இறுதிவரை செல்வாக்குப் பெற்றிருந்த கல்வெட்டு எனும் நினைவு மலர் வெளியீடு கடந்த 10 வருடங்களுள் மிகச்செல்வாக்கிழந்துவிட்டது. அது செல்லாக்காசாகிவிட்டது. 'கல்வெட்டு அடித்தல் பயனற்ற செயல்' என்றும் 'அதனை ஒருவரும் வாசிப்பது இல்லை' என்றும் 'சும்மா கொண்டு போய் வைப்பது பின் குப்பையில் போடுவது' என்றும் 'அதில் வரும் பஞ்ச தோத்திரங்கள் எல்லாக் கல்வெட்டிலும் உள்ளது' என்றும் 'ஆதலால் ஒன்றை வைத்துக்கொண்டு ஏனையவற்றை எரிந்து விடுவதாகவும்' பல உரையாடல்கள் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றில் உண்மை இல்லாமலும் இல்லை. அவசரத்தில் குறித்த காலத்துக்குள் கல்வெட்டுகள் ஆக்கப்படுவதால் அச்சகத்தினரும் தம்மிடம் தயார் நிலையில் உள்ள இறை பாடல்களை எல்லாக் கல்வெட்டுகளிலும் பதிவிடுகின்றனர்.

மேற் சொன்ன குறைகளை மனதில் கொண்டு சமகாலத்தில் இறந்தவர் தாயாராயின் தாய் பற்றிய கதைகள், கவிதைகள் தந்தை எனின் தந்தை பற்றி வெளிவந்த சிறந்த சிறுகதைகள் கவிதைகள் என்பவற்றைத் தொகுத்து வெளியிடுகின்றனர். பக்திப் பாசுரங்களின் தொகுப்புக்கள், பொது அறிவு, மருத்துவம், முதுமை, உளநலம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களின் தொகுப்புகளாக நினைவு மலர்கள் வெளிவந்தன. அவையும் ஜனரஞ்சகப் பெருவழிக்கு உரியதாக இல்லை. இவற்றுக்கு மாறாக எவர்சில்வர் பாத்திரங்கள், பூங்கன்றுகள், மரங்கள் வழங்கும் முறைமைகளும் இன்னும் நவ நாகரிகச் செயல்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. அந்தியேட்டி நினைவு மலராகிய கல்வெட்டில் பல குறைபாடுகளைச் சொல்லும் பெரும்பாலானவர்கள் சரமகவி எனும் வரலாறு சார் அகவற்பாவைப் பற்றி கருத்துரைப்பதில்லை. ஏனெனில் அது கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. இதற்கு தேவையற்றது, விளங்காது என காரணங்கள் கூறப்படும். ஆனால் அது பிரதானமான ஆவணம் ஆகும். (செல்வராஜா, என்., 2005, பக். 18-26)

திருமதி திருவிளங்கம் பாக்கியலட்சுமியின் இந்த நினைவு மலர் அவரது படம், அமரத்துவம் அடைந்த தினம் (இது பெரும்பாலும் திதிவெண்பாவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும். இங்கு எண்சீர் விருத்தப்பாவில் ஆக்கப்பட்டுள்ளது) வரலாறு, குடும்ப உறுப்பினர்கள் விபரம் என்பவற்றோடு உள் முகப்புத்தாளில் விநாயகர் படம், அராலி கிழக்கு –வண்ணார் பண்ணை எனும் இரு இடங்கள், ஜனன, மரண தினங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இங்கு இடம்பெற்றுள்ள வரலாறு பின்வரும் விடயங்களை எடுத்துரைக்கின்றது.

அ. 1. வட்டுக்கோட்டை சுப்பிரமணியர் ஆறுமுகம் எனும் புகையிரத இலாக்கா அதிபர்

2. யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைச் சேர்ந்தவரும் கீரிமலையில் சமாதி வைக்கப்பட்டவருமான அருளம்பல சுவாமியின்

3. அன்பு புத்திரி விஜயலட்சுமி திருமணம் செய்தார்.

ஆ. 1. ஆறுமுகம் விஜயலட்சுமிக்கு 1908.02.29 அன்று ஒரு மகள் பிறந்தார்.

2. அவரே பாக்கியலட்சுமி

இ. 1. அராலியைச் சேர்ந்த தம்பையா மரகதம் தம்பதியினரின் மகனும்

2. வங்கிச் சிறப்பராய், பின் யாழ். ஐக்கிய இலாப நிதியின் கணக்காளராய் மிளிர்ந்த திருவிளங்கம் என்பவரை திருமணம் செய்தார்.

ஈ. பிள்ளைகள்

1. இலங்கை சிவில் சேவை பரீட்சையில் சித்தியெய்தி நீர்ப்பாசன இலாக்காவில் அதிபராய் மகன் பத்மநாதன் மனைவி அரங்கநாயகி
2. நீர்ப்பாசன இலாக்கா சிவில் ஓவர்சியர் பாலேந்திரா மனைவி நித்தியானந்தலட்சுமி
3. இலங்கை புகையிரத இலாக்கா திருச்செல்வம் மனைவி உமாதேவி
4. உதவித்தொழில் நுண்ணதிபர் றொபீந்திரநாத்
5. சரோஜினியின் கணவர் இராசையா – கல்லோயா அபிவிருத்திச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பத்மாதேவியின் கணவர் வெற்றிப்பிள்ளை – பகிரங்க வேலைப்பகுதி
7. செல்வி இரஞ்சிதமலர்
8. பேரப் பிள்ளைகள் விபரம்

பின்னடையில் ஆங்கிலத்தில் பிள்ளைகளின் விபரம் என்பன கூறப்பட்டுள்ளன.

1.7.1 கல்வெட்டின் சமூகப் பெறுமானம்

1. இந்த கல்வெட்டு பிரித்தானியராட்சிக் காலத்தில் சைவப் பெயர்களுடன் சமயம் மாறாது அரச உத்தியோகம் புரிந்தமையை காட்டுகிறது.

2. கீரிமலையில் சமாதி வைக்கப்பட்ட அருளம்பல சுவாமிகள் பற்றிய தகவல் கூறப்படுகிறது. ஈழத்துச் சித்த மரபின் முதல்வர்களில் ஒருவரான குழந்தைவேற்சுவாமிகளின் முதன்மை சீடர் இவர். மட்டக்களப்பில் சேர் பொன். அருணாசலத்தின் கீழ் பிரதம லிகிதராக கடமை ஆற்றியவர். மட்டக்களப்பு ஆரையம்பதி விநாயகர் ஆலயத்தை கட்டியவர். ஆத்மஜோதி முத்தையா இவரைப் பற்றி எழுதியுள்ளார். சுத்தாத்வைத அச்சுக் கூடத்தை நிறுவி பதிப்பு பணி செய்துள்ளார். சுத்த சன்மார்க்க சபை எனும் ஆன்மிக நிலையத்தை வண்ணார்பண்ணை சிவலிங்கப் புளியடியில் நிறுவியுள்ளமையை அறிய முடிகிறது.
3. நீரிலாக்கா, புகையிரதம் ஆகிய திணைக்களங்களில் அரசபணி
4. வட்டுக்கோட்டை, அராலி, வண்ணார்பண்ணை, திருமணவுறவுகள்
5. ஜாதிப் பெயரைப் பதிவிடல்
6. பிள்ளைகளை வயதடிப்படையில் உரைக்காமல் ஆண் பிள்ளைகளை கூறிய பின் பெண் பிள்ளைகளைக் கூறும் மரபு

என்பவற்றை வெளிப்படுத்தி நிற்கிறது. பாக்கியலட்சுமியின் மூத்த மகன் திருவிளங்கம் பத்மநாதன் 2020 ல் மரணம் அடைந்தபோது வெளியிட்ட கல்வெட்டில் அவர் இறுதியாக முன்னாள் இலங்கை ஜனாதிபதி ஸ்ரீமாவோ ஆட்சிக்காலத்தில் இலங்கையின் உணவுத்துறை ஆணையாளராக குடும்ப அட்டையில் கையெழுத்திடும் அதிகாரம் மிக்கவராக இருந்து ஓய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார் என்பதும் அவரது மனைவியே இலங்கையின் முதலாவது தமிழ் பெண் பாராளுமன்ற உறுப்பினர் என்பதும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே கல்வெட்டுக்கள் வெறும் 'புலம்பல்கள்' அல்ல. அவை தனிமனிதரின், குடும்பத்தின், பரம்பரையின் வரலாற்று ஆவணம். இவ்வாறான பல பரம்பரைகளின் வரலாறே, குழுமத்தின், இனத்தின் வரலாற்றைப் பேச வல்லனவாகின்றன. இவை மொழி, தொழில், பண்பாடு அக்கால சமூகப் பழக்கவழக்கங்கள், திருமண முறைகள், குடும்ப வரலாறுகள் என சமூகவியல், இனவரைவியல், வரலாறுகளை கட்டமைக்க வல்ல ஆவணங்களாகின்றன. ஆகவே கல்வெட்டுகளை கைவிடாது அச்சாக்கம் செய்து விநியோகித்தலும் அதனை ஆவணப்படுத்தலும் மனித குல வரலாற்றுக்கும் ஆய்வுப் புலத்துக்கும் நாம் செய்யும் அருங்கைங்கரியமாகும்.

1.8 ஆவணப்படுத்துனர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை

கிடைத்திருக்கக்கூடிய அனைத்து எழுத்துக்களையும் சிதைவின்றி அப்படியே ஆவணப்படுத்துதல் அவசியம் ஆகும். ஏனெனில் இன்றைய சூழலில் ஆவணப்படுத்தல் பணி ஒரு வேலைவாய்ப்பாகப் பரிணமித்து வருகிறது. அவ்வேலைக்கு வருபவர் யாவரும் அதனை விரும்பி வருவதென்றில்லை. ஆவணப்படுத்தும் விடயதானம் பற்றிய அறிவில்லாது இருத்தல் தவறில்லை. ஆனால் ஆவணப்படுத்தல் பற்றிய அறிவு அவருக்குத் தெளிவுற இருத்தல் வேண்டும். அல்லாது விட்டால் ஆவணங்கள் கவனக் குறைவுடனும் ஒழுங்கின்றியும் குறைபாடு உடையதாகவும் ஆவணப்படுத்தப்பட்டுவிடும். நூலக நிறுவனத்தில் எண்ணிம வடிவில் இந்து சாதன ஆரம்பகால இதழ்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் இதழின் சின்னம் முழுமையாக ஆவணப்படுத்தப்படாமையை நாம் அவதானிக்கலாம். குறித்த ஆவணம் மீளக் கிடைக்காத பட்சத்தில் அக்குறையை நீக்க முடியாது. அதுபோல ஆவண காகிதாதிகளை கையாளுதலிலும் கவனம் செலுத்துதல் மிக மிக அவசியமாகும்.

1.9.சமகால அவதானிப்புக்கள்

சமகால உலக அரங்கில் ஆவணப்படுத்தல் ஒரு வேலைத் திட்டமாகவே முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதிலும் காகிதாகிகளை அவ்வாறே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணுவதிலும் பார்க்க எண்ணிமப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. யுத்தம், நூலக எரிப்பு, இயற்கை அனர்த்தம், பேணுதலில் காகிதாகிகளின் ஆயுட்காலம் என்பவற்றை கருத்தில் கொள்ளும்போது எண்ணிமப்படுத்தல், மின் ஆவணமாக்கல், மிகத் தேவையானதும் தவிர்க்க முடியாததும் ஆகும்.

குறித்த ஆவணக்காப்பகத்திலோ, நூலகத்திலோ மட்டும் இருந்த ஆவண எழுத்துரு எண்ணிம நூலகங்களின் வழி உலகெங்கும் உள்ள மனிதர்களால் நுகரப்படும் பண்டமாயிற்று. இரகசிய பேணுகையாக இருந்த ஆவணம் திறந்த ஆவணமாக யாவர்க்குமானதாக ஜனநாயகப்படுத்தப்பட்டுள்ளது. உலகம் பூகோளமயமாதலின் வழி எம்மகத்தினுள் வந்துள்ளது.

அதேவேளை எண்ணிம ஆவணங்களை தொழில் நுட்ப அடிப்படையில் பேணும்போது ஏற்படக்கூடிய குறைபாடுகளால் முற்றாக அழிந்துபோகும் வாய்ப்பு உள்ளது என்பதும் கவனத்துக்கு உரியது.

இன்று தனிமனிதர்கள், ஆவணக்காப்பகங்கள், தொடர்புடைய நிறுவனங்கள் மட்டுமின்றி மாகாண அமைச்சுக்கள், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்களும் மீள்பதிப்பிடல், எண்ணிமப்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுவருதல் ஆரோக்கியமான நிலைப்பாடாக அமைந்துள்ளது.

1.10 முடிவுரை

காலத்துக்கேற்பத் தம்மைத் தகவமைத்துக் கொள்ளாத எதுவும் நிலைத்து நிற்பதில்லை. இருப்புச் சார்ந்த கருத்துருவாக்கமானது, தனிநபர்,குடும்பம், பரம்பரை, குழுமம், இனம், மொழி, சமூகம், தேசம் என வளர்ச்சியுற ஆவணங்கள் இன்றியமையாதவை. பூகோளமயமாதலின் வழி தகவல் யுகமாக, ஆதாரமற்ற விடயங்களை தர்க்க பூர்வமாக நிராகரிக்கின்ற இன்றைய விஞ்ஞான உலகு ஆவணங்களால் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஒன்றின் தரவில் இருந்து வேறாய் கிளர்ந்துவரும் கண்டுபிடிப்புக்கள் ஆவணங்களைப் புதுப்பித்துக் கொண்டேயிருக்கின்றன. ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக விஞ்ஞான, மானுடவியற் கற்கைப்புலங்கள் ஆவணங்களின் நீண்ட தொகுப்புக்களின் வழியில் தம்மைத் தகவமைக்கின்றன. மனிதர், தம்மை – இயற்கையை அறிய முற்பட்ட காலத்திலேயே சமயங்களும் உருவாகிவிட்டன. சமூகத்தினின்றும் பிரிக்க முடியாத இடம் சமயத்துக்கும் சமய ஆவணங்களுக்கும் உண்டு. குறித்த சமூகத்தின் நம்பிக்கைகளே அச்சமூகத்தின் அனைத்து அசைவியக்கங்களிலும் செல்வாக்குச் செலுத்தும். ஆகவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உருவான நவீனத்துவத்தின் வழி பதிப்பியலும் இதழியலும் சமய பிரசாரத்துக்காக காலனித்துவ அரசால் கையளிக்கப்பட்டன. அவை சமயவியற் கருத்துக்களோடு சமூக அசைவுகளையும் அந்த அந்தக் காலத்தையும் வெளிப்படுத்தி வந்தமையால் சமூக வரலாற்று ஆவணங்களாகப் பன்முகத்தன்மை பெற்றன. காலவோட்டத்தில் விஞ்ஞான உலகம் அவற்றை சமூகத்தின் மையத்தில் இருந்து விளிம்புக்கு இட்டு வந்துவிட்டன. இதழியலாளர்களும் சமூக விஞ்ஞான செயற்பாட்டாளர்களும் இவை தொடர்பான பல்வேறு விழிப்புணர்வுகளை சமூகத்தில் ஏற்படுத்தி வருகின்றமை பாராட்டத்தக்கது. அவர்களுள் ஒருவராக திருமதி.ஶ்ரீகாந்தலட்சுமி அவர்களும் செயற்பட்டிருந்தார். சமயம் சார்ந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிறப்பு மலர்கள், நினைவு மலர்கள் ஆசிச் செய்திகளையும், வாழ்த்துச் செய்திகளையும் குறைத்துக் கொண்டு குறித்த விடயம் தொடர்பான நுண்ணாய்வுகளையும் தரவுகளையும், படங்களையும் தாங்கி வருதல் ஆவணமாக்கல் செயற்பாடாக, சமூகப் பெறுமானம் மிக்க ஒன்றாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை (Bibiliography)

Bawden, D. (2004). Understanding documents and documentation. Journal of Documentation, 60(3), pp. 243-244 http://openaccess.city.ac.uk/

Briet, S. (2006). What is documentation? In R. E. Day, L. Martinet, & H. G. B. Anghelescu (Eds.), What is documentation? English translation of the classic French text (pp. 9–46). Lanham, MD: Scarecrow Press.

Buckland, M.K. (1997), What is a "document", Journal of the American Society for Information Science, 48(9), 804-809

Cristina Dotta Ortega, (2009), Documantation as one of the Origins of the Information Science and a Fertile Basis for its Grounding , BJIS, v.3, n.1, p.3-34, Jan./Jun. 2009. Available in: <http://www2.marilia.unesp.br/revistas/index.php/bjis>. ISSN: 1981-1640

Day, R. E. (2014). Indexing it all: The subject in the age of documentation, information, and data. Cambridge, MA: The MIT Press.

Harrod, Leonard Montague. Harrod's librarians' glossary of terms used in librarianship, documentation and the book crafts and reference book. 6th ed. London

John W. Suter (2003) Documentation Basics A Guide to Planning and Managing Documentation Projects, New York State Archives (a program of the State Education Department) and the New York State Historical Records Advisory Board

Kulathungam,S. Lyman,(1941), TheStory of the Star The morning Star 1841-1941, Cantenary Mamorial Edition, Tellipalai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Manuel Guzman and Bert Verstappen, (2003), What is Documentation (v.2), HURIDOCS [Switzerland

Nadarajan,S. A., (1962.), History of Printing in India, Bombay,

Rhodes,E., .Dennis, (1969), The Spread of Printing-Eastern Hemisphere, (India, Pakistan, Ceylon, Burma and Thailand) London

கோப்பாய் சிவம். (1985). இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைகள்-சஞ்சிகைகள் (1841-1984). ப.சிவானந்த சர்மா, புத்தூர்.

கோபிநாத். தி., (2020). நமது வரலாற்றை நாங்கள் தான் ஆவணப்படுத்த வேண்டும்.ஜீவநதி. யாழ்ப்பாணம்.

சிவநேசச்செல்வன்,ஆ.. (1974). ஈழநாட்டிலே தமிழ்ப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும்- சில குறிப்புக்கள். திருமகள் அழுத்தகம். சுன்னாகம்.

சிவநேசச்செல்வன்.ஆ.. (2020). ஈழத்து தமிழ்ப் பத்திரிகைகள் ஓர் ஆய்வு. டிசைன்லப், கொழும்பு.

செல்வராஜா. என்., (2005). நூலியல் பதிவுகள். அயோத்தி நூலக சேவைகள். ஐக்கிய .ராட்சியம். சிந்தனை வட்டம். இலங்கை.

சௌந்தரராஜசர்மா. க.. மதுசூதனன். தெ..(2016). கருந்தூண். நூலக விழிப்புணர்வு நிறுவகம். சேமமடு புத்தக சாலை கொழும்பு.

சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார். (2016). யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகள் (1900-1915). குமரன் புத்தக இல்லம். கொழும்பு.

தசரதன் எ..பூமிநாகநாதன். டி..(பதி) (2001). தமிழில் ஆவணங்கள். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். சென்னை.

ஸ்ரீகாந்தலட்சுமி.அ., (2010). தகவல் வளங்களும் சேவைகளும். குமரன் புத்தக இல்லம். கொழும்பு.

ஸ்ரீகாந்தலட்சுமி.அ., (2018). ஈழத்தமிழ்ச் சமூகமும் ஆவணவாக்கமும். http:// karuththuunn.blogspot.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி. செல்வமனோகரன் : யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இந்து மெய்யியல் பட்டதாரியான இவர் அத் துறையில் முதுதத்துவமாணிப் பட்டத்தையும் நிறைவு செய்துள்ளார். இப்பல்கலைக்கழகத்தின் இந்து கற்கைகள் பீட, சைவசித்தாந்தத் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமைபுரிந்து வருகிறார்.

மெய்யியல், இலக்கியவியல், கலையியல் உள்ளிட்ட துறைகளில் ஊடாடித் தனக்கான விமர்சனச் சிந்தனைசார் நவீன அணுகுமுறைகளுடன் கூடிய கோட்பாட்டாக்க மரபை உணர்ந்து உருவாக்குபவர். இவற்றின் வெளிப்பாடாக சர்வதேச ஆய்வரங்குகளிலும், இதழ்களிலும் பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளை எழுதி வருபவர்.

நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஏடுகள், புழங்குபொருட்கள் போன்றவற்றின் சேகரத்திலும் அதிக ஈடுபாடுகாட்டி வருகிறார். ஆவணமாக்கல் செயற்பாட்டாளராக பல்வேறு முயற்சிகளைச் செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. ஈழத்தின் கிடைத்தற்கரிதான நூறு வருடங்களுக்கு முற்பட்ட பதினைந்துக்கும் மேற்பட்ட நூல்களை மீள் பதிப்புச் செய்துள்ளார். மூன்று தொகுப்பு நூல்களும் இவரால் வெளியிடப்பட்டுள்ளன.

இவை தவிர இலங்கையின் சைவத்தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் (2014), தமிழில் மெய்யியல் (2017) சொற்களால் அமையும் உலகு (2018) காஷ்மீர சைவமும் சைவ சித்தாந்தமும், (மீள்பதிப்பு -2020) நாயன்மார் பாடல்கள் (2020) முதலான நூல்களை ஆக்கியளித்துள்ளார்.

Print@Mickey-Chava
021-2-27-17-07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org